624

# மலாயா
# தேசிய வாசகம்

ஆறாம் வகுப்பு



624
3.62

TB
031 (6)
N62
135742

த்தகசாலை கோலாலம்பூர்.

# மலாயா தேசிய வாசகம்

ஆறும் வகுப்பு

ஆசிரியர் :

அ. இராமநாதன்

(ஆட்சி முறை, செந்தமிழ்ப் பயிற்சி நூல், பழமொழி
விளக்கம் முதலிய நூல்களின் ஆசிரியர்)

MADRAS RECORD OFFICE
MADRAS

விற்பனை உரிமை:

கிருஷ்ணா புத்தகசாலை

25, பத்து ரோடு, கோலாலம்பூர்.

பதிப்புரிமை: அசோக் அண்ட் கோ விலை $. 1-40

முதற் பதிப்பு 1961.
இரண்டாம் பதிப்பு 1962.

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
135742

73
O31(b)
N62

The Progressive Printers, Madras-1

# முன்னுரை

அன்பு கடவுள் என்று சொல்லும்
அமுத மான தமிழ்மொழி
இன்பமுண்டு; துன்பமில்லை
என்று சொல்லுந் தமிழ்மொழி
பொன்பரவுங் காலை போலப்
புதுமை யான தமிழ்மொழி
பண்பரவுங் கலையுலகிற்
பழமை யான தமிழ்மொழி
வாழ்க நம் தமிழ்மொழி – நீடு
வாழ்க நம் தாய்மொழி
வாழ்கவே!!

தமிழர் உயிர் நிலை தமிழ்; தமிழ் இல்லாது தமிழினம் இல்லை. தமிழ் உலகின் முன்மொழி, தொன்மொழி, தேன்மொழி. எங்கே இருந்தாலும், தமிழர் தமிழரே; தமிழே பேசுக.

மலாய் நாட்டில் இலட்சக்கணக்கான தமிழர் இருக்கிறார்கள். தமிழ்ப்பள்ளிக்கூடங்களும் ஊர் தோறும் உள்ளன. தமிழுக்கு இங்கே தக்க இடம் உண்டு. நாட்டு மொழி மலாய்; வீட்டு மொழி தமிழ்; இரண்டும் வளரவேண்டும்.

தமிழ்க்குழந்தைகள் எளிதாகத் தமிழ் கற்கவே இந்தப்பாடநூல்வரிசை எழுதப் பெற்றுள்ளது. நடை எளிது; பாடப்பொருள் அறிவை வளர்ப்பது; தமிழ் நீரோட்டம் போன்றது. அரசாங்கம் வகுத்த முறைப்படி தொகுத்த இப்பாடநூல் வரிசை, மலாய்ப் பிள்ளைகள் மகிழ்வுடன் ஓதத் தக்கது. இப்பாடத் தொகுதியைத் தொகுத்தளித்த,

ஈப்போ அ. இராமநாதன் செய்த தமிழ்ப்பணி போற்றத் தக்கது. இன்பம் சூழ்க! எந்தாய் வாழ்க!

சுத்த சமாஜ குருநாதர்
பெடாலிங்
கோலாலம்பூர்
1-9-61

சுத்தானந்தபாரதி

# முகவுரை

தேசிய வாசகம் என்னும் பாட வரிசையில் இஃது ஆறும் வகுப்பிற்குரிய ஆறும் புத்தகமாகும். இப்பாட நூல் மலாயாக் கூட்டரசு அரசியலாரின் கல்விக் கொள்கைகளுக்கு இணங்கவும், தன் பெயருக்கு ஏற்பவும் பெரும்பாலும் மலாயாவைப் பற்றிய செய்திகளையே பாடப் பொருள்களாகக் கொண்டு, மலாயா நாட்டுப் பற்றையும், மொழிப்பற்றையும் வளர்க்கும் முறையில் எழுதப்பட்டுள்ளது.

மாணவ மாணவியரின் பொது அறிவை வளர்ப்பதற்கான புதிய பாடங்களும் இதில் போதிய அளவு இடம் பெற்றுள்ளன.

மாணவ மாணவியர்க்கும், ஆசிரிய மாணவர்க்கும் தமிழ்ப் பாடம் போதித்துப் பெற்ற அநுபவ அடிப்படையின் மீது, திருத்தமான தமிழ் நடையில் இப் பாடநூல் வரிசை உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதிலுள்ள "குருடர்கள் பலவிதம்" என்னும் நாடகம் பீர்பால் கதைகளைத் தழுவியது.

இவ்வாசக நூல் வரிசை சிறப்புற அமைதற்கேற்ற அரிய ஆலோசனைகளைக் கூறியும், பாடங்களைப் பார்வையிட்டு வேண்டிய திருத்தங்களைச் செய்தும் உதவிய இந்தியப் பள்ளிகளின் அமைப்பாளர்களுக்கு என் பணிவார்ந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

பாடங்களைத் தேர்ந்தெடுப்பதிலும், அவற்றைக் கோவைபட அமைப்பதிலும் உறுதுணை புரிந்த ஆசிரியர் திரு. மா. பொன்னுசாமி அவர்களுக்கும் என் நன்றி உரியது.

இவ் வாசக வரிசையைத் தங்களின் அரிய வெளியீடாக மலரச்செய்த கோலாலும்பூர் அசோக் அண்ட் கம்பெனியார் அவர்களுக்கும், இதனை எழிலுற அச்சிட்டுக் கொடுத்த புரோகரசிவ் அச்சகத்தாருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலின் வளர்ச்சிக்கான திருத்தங்கள் நன்றியறிதலோடு ஏற்றுக் கொள்ளப்படும்.

அ. இராமநாதன்.

# பதிப்புரை

ஆரம்பப் பாடசாலைகளுக்கு வாசக புத்தகம் எழுதுவ தென்பது எல்லோராலும் முடியக்கூடிய காரியமன்று. "மலாயா தேசிய வாசகம்" என்னும் இப் பாட வரிசை நூலை எழுதியுள்ள அ. இராமநாதன் பெரும் பட்டதாரி யல்லர். ஆனால், மலைநாட்டிலுள்ள தமிழ்ப் பள்ளிகளில் பல ஆண்டுகளாக ஆசிரியராகப் பணியாற்றிப் பல வகுப்புக் களுக்குப் பாடம் நடத்தி, அன்றைய நிலையிலிருந்து இன்றைய நிலை வரையிலுமுள்ள பிள்ளைகளின் மன நிலை யையும் கல்வித்தரத்தையும் அறிந்துள்ளதோடு, சில ஆண்டுகளாகப் போதனமுறை வகுப்புகளுக்கும் தமிழ்ப் பாடம் நடத்தி வருவதால் வருங்கால ஆசிரியர்களிடமுள்ள இலக்கண, இலக்கியத் திறமைகளையும் நன்கு தெரிந்து கொண்டுள்ளவர். இவ்விரு அநுபவத்தையும் வைத்து, இன்றைய பள்ளிப் பிள்ளைகளின் தமிழ்ப் புலமையை விருத்தி செய்யும் வகையிலும், வருங்காலத்தில் இந்நாட்டில் நம் தாய்மொழி, பிற இனமொழிகளுடன் சம உரிமை பெற்று விளங்க வேண்டுமென்ற குறிக்கோளுடனும் இப் பாட வரிசை நூலை எழுதியுள்ளார். ஆசிரியர் அவர்களின் தமிழ்ப் புலமையை அவரின் செந்தமிழ்ப் பயிற்சி நூல்களின் மூலம் ஆசிரியர் குழாம் நன்கு அறியும்.

"மலாயா தேசிய வாசகம்" என்னும் இப் பாட நூல் வரிசைக்குப் பாடங்கள் எழுதும்பொழுது, வருங்காலத்தில் பிள்ளைகள் பாடங்களைப் புரிந்துகொண்டு ஆர்வத்துடன் படிக்கவேண்டும் என்ற அவாவாலும், போதிக்கும் ஆசிரியர் கள் எவ்வளவு தூரம் விளக்கிக்கூறிப் போதிக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும், ஒவ்வொரு பாடத் தையும் எழுதி, வகுப்புகளில் போதித்துப் பார்த்து, அவற்றுள் எவ்வெவற்றை எளிதாக்க வேண்டும், எந்தெந்த வகுப்புகளில் எந்த அளவு இலக்கண இலக்கியங்களைப் புகுத்தவேண்டும் என்பதை நன்கு அறிந்து, அதைத் திருத்தி

அமைத்து, அதன் பிறகு அவருக்குத் தெரிந்த ஆசிரியர் குழாமுடன் அப்பாடங்களை வைத்து விவாதித்து இவற்றைப் பாடமாக்கலாம் ; என்று அவர்களின் ஒப்புதலும் கிடைத்த பிறகே புத்தகங்களை அச்சிடக் கொடுத்தார்.

இதுவரையிலும் ஒரு சில வாசக புத்தகங்கள் வெளியாகி யிருக்கின்றன. அவையினும் சிறந்து விளங்க வேண்டுமென்ற காரணத்தால், நீண்ட நாளாக அயராத உழைப்பின் மீது ஆசிரியர் பலரின் உதவி கொண்டும், இந்திய கல்வி இலாகாக் கண்காணிப்பாளர் மேற்பார்வையிலும் சிறந்த முறையில் இம் "மலாயா தேசிய வாசகத்தை" உருவாக்கியுள்ளார். அதை நாங்களும் பல பதிப்புக்கள் வெளி வந்து கொண்டிருக்கும் இத் தருணத்தில் போற்றத் தகும் புதுமுறையில் அச்சிட்டுள்ளோம். இதுவரையிலும் இம்மாதிரி வாசக புத்தகம் இம் மலைநாட்டில் வெளியானதில்லை என்பதைப் புத்தகங்களைக் கண்ணுறும் எவரும் ஒப்புக் கொள்வார்களென்பதில் ஐயமில்லை.

பள்ளிப் பிள்ளைகள் விரும்பிப் படிக்கக்கூடிய வகையிலும், ஆசிரியர்கள் அக்கறையுடன் போதிக்க வேண்டுமென்ற கருத்திலும் சிறந்த முறையில் எழுதப்பட்டுள்ள "மலாயா தேசிய வாசகம்" என்னும் இந்நூல், எங்கள் பதிப்பாக வெளிவருவதில் பெருமை அடைகின்றோம்.

புதிய பாடத் திட்டப்படி எழுதி வெளியிட்டுள்ள எங்களின் பல வெளியீடுகளையும் ஆதரித்து, ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் கல்வி இலாகா அதிகாரிகளும், ஆசிரியப் பெருந்தகைகளும் வியாபாரப் பெருமக்களும் இப் புத்தகங்களையும் ஆதரிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

வணக்கம்.

கோலாலம்பூர்,<br>25—8—61.

அசோக் அண்ட் கம்பெனியார்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நமது கொடி | ... 1 |
| 2. | பேரரசின் பதவி ஏற்பு விழா | ... 6 |
| 3. | நபிகள் நாயகம் | ... 15 |
| 4. | செவ்வரத்தம் பூ | ... 19 |
| 5. | சுவாமி சத்தியாநந்தா | ... 22 |
| 6. | தமிழ்ப் பாட நூல்களின் தந்தையர் | ... 27 |
| 7. | தேசியப் பொருட்காட்சி | ... 33 |
| 8. | பொது நூலகங்கள் | ... 37 |
| 9. | நூல்களைப் பாதுகாத்தல் | ... 41 |
| 10. | தைப்பூசத் திருவிழா | ... 48 |
| 11. | பொதுப் பூங்கா | ... 52 |
| 12. | குகைக் கோவில்கள் | ... 56 |
| 13. | நன்னீர்த் தேக்கம் | ... 61 |
| 14. | பேரா நதி தன் வரலாறு கூறுதல் | ... 65 |
| 15. | கீஸா பிரமிடுகள் | ... 71 |
| 16. | அன்னுசி | ... 79 |
| 17. | பன்றி | ... 83 |
| 18. | மூங்கில் | ... 86 |
| 19. | பாஞ்சாலி சபதம் | ... 90 |
| 20. | குருடர்கள் பலவிதம் (நாடகம்) | ... 96 |
| | செய்யுட் பகுதி | ... 103 |



கூட்டரசுக் கொடி

# மலாயா தேசிய கீதம்

# NEGARA - KU

## நெகாரா - கூ

NEGARA-KU TANAH TUMPAH-NYA DARAH-KU
நெகாரா-கூ தாஞ தும்ப்பஞ டாரா-கூ

RA'AYAT HIDUP BERSATU DAN MAJU
ராயாத் ஹீடுப் பெர்சத்து டான் மாஜூ

RAHMAT BAHAGIA TUHAN KURNIAKAN
ரஹ்மட் பஹாகிய தூஹான் குர்னியாக்கான்

RAJA KITA SELAMAT BERTAKHTA
ராஜ கித்த ஸ்லாமட் பெர்த்தஹ்த்த

RAHMAT BAHAGIA TUHAN KURNIAKAN
ரஹ்மட் பஹாகிய தூஹான் குர்னியாக்கான்

RAJA KITA SELAMAT BERTAKHTA
ராஜ கித்த ஸ்லாமட் பெர்த்தஹ்த்த

## தேசிய கீதம் - தமிழாக்கம்

எங்கள் நாடு எங்கள் குருதியில் கலந்த நாடு
மக்கள் ஒன்ருய் வெற்றியோடு வாழ்க
இறைவன் அருளும் சீரும் சிறப்பும் நல்க
எங்கள் அரசர் நீடு அரசு புரிக
இறைவன் அருளும் சீரும் சிறப்பும் நல்க
எங்கள் அரசர் நீடு அரசு புரிக.

# 1. நமது கொடி

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் தனித் தனிக் கொடியுண்டு. அது நாட்டின் மானத்திற்கும், வீரத்திற்கும், உரிமைக்கும் அறிகுறியாய் விளங்கு கின்றது.

சமயத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும், கட்சித் தலைவர்களும், தத்தங் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் மக்களுக்கு உணர்த்தும் சின்ன மாகக் கொடிகளைக் கொள்ளுகின்றனர்; தங்களின் சார்பாளர்களை ஒழுங்கு திரட்டிப் பேசவும், செயலில் ஈடுபடுத்தவும் அவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்கள் நாட்டுக் கொடி உயரப் பறக்கும் பொழுது மகிழ்கிறார்கள்; அதற்கு வழிபாடு செய்கிறார்கள்; தங்கள் நாட்டுத் தேசிய கீதம் பாடும்பொழுது எழுந்து நின்று மரியாதை செய்கின்றனர். மலாயாவில் அமைதி நிலவவும், மக்களின் வாழ்க்கை நிலை உயரவும் இங்குள்ளோர் அனைவரும் கூட்டரசுக் கொடியின் கீழ் ஒன்று கூடிப் பணி புரிய வேண்டும். ஆகவே, நம் கூட்டரசுக் கொடியைப் பற்றி நாம் அறிந்து கொள்ளுவது நலம்.

கூட்டரசுக் கொடியில் வெள்ளையும் சிவப்பு மாகப் பதினொரு பட்டைகள் தீட்டப்பட்டுள்ளன. இவை, "பெர்லிஸ், கெடா, கிளந்தான், திரங்கானு, பகாங், ஜோகூர், நெகிரி செம்பிலான், பேரா, சிலாங்கூர்" என்னும் ஒன்பது மாகாணங்களையும்,

பினங்கு—வெல்லஸ்லி, மலாக்கா ஆகிய இரு தனி மாகாணங்களையும் அடக்கிய மலாயாக் கூட்டரசின் ஒற்றுமையைக் குறிக்கும்.

விண்மீனும் இளம் பிறையும் மஞ்சள் நிறத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை, மலாயா அரசர்களான சுல்தான்களின் இஸ்லாமிய சமயத்தைக் குறிக்கும்.

சிவப்பு, வெள்ளை, நீலம் ஆகிய மூவகை நிறங்கள் மலாயாக் கூட்டரசிற்கும் பிரிட்டனுக்கும் உள்ள தொடர்பையும், அவற்றிற்கும் "காமன் வெல்த்" எனப்படும் பொது நல அரசுக்கும் உள்ள இணைப்பையுங் குறிக்கும்.

மலாயாக் கூட்டரசு பல நாட்டவர், பல மொழியினர், பல சமயத்தவர் சேர்ந்து வாழும் நாடு. நாமனைவரும் நாடு, இன, மொழி, சமய, கருத்து வேறுபாடின்றி, மலாயாக் கூட்டரசுக் கொடியை வணங்குதல் வேண்டும். சிறந்த செல்வம் போல இதனைப் பேணுவதன் மூலம் நம் கண்ணியம் உயர்த்தப் படுகிறது.

கொடியைச் சாதாரணத் துணியென்று கருதிக் கண்ட விடத்தில் போட்டு வைக்கக் கூடாது. அது வெயிலாலும், மழையாலும் பழுதாகாமல், கறை படியாமற் காக்கப்பட வேண்டும். கறை பட்டுச் செல்லரித்துப் போன துணியிலோ, கிழிந்து நைந்து போன துணியிலோ கொடி தயாரித்தல் கூடாது. தலையணை உறையாகவோ, மேசை, படுக்கை விரிப்புக்களாகவோ, திரைத்துணியாகவோ, போர்வையாகவோ கொடியைப் பயன்படுத்தக் கூடாது.

கொடியை நீண்ட காலம் உழைக்கக் கூடிய துணியில் தயாரிக்க வேண்டும். கொடியில் காணப் படும் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறங்கள் வெயி லாலும் மழையாலும் நிறங் குன்ருதவாறு கெட்டிச் சாயமுள்ள துணியில் கொடிகளைத் தயாரித்தல் வேண்டும்.

கொடியை மனம் போனபடி நீளமாகவோ, குட்டையாகவோ தயாரிக்கக் கூடாது. கொடியின் அளவு நீண்ட சதுரமுடையதாய், நீளத்தைக் காட்டிலும் அகலம் மூன்றில் இரண்டு பங்குள்ளதா யிருக்க வேண்டும். குறிப்பாக, மூன்றடி நீளமா யிருந்தால் இரண்டடி அகலமிருக்க வேண்டும். நீல நிறத்தில் காணப்படும் விண்மீனும் இளம் பிறையும் நீல நிறப் பகுதியினுள்ளே அடங்கியிருத்தலோடு, பதினெரு பட்டைகளுக்குக் குறைவாகவோ மிகுதி யாகவோ இருத்தல் கூடாது.

கொடிக்கென்று ஒரு கம்பம் நட்டு அதில் கதிர வன் தோன்றியதும் கொடியை ஏற்றுவர்; கதிரவன் மறைந்த பின் கொடியை இறக்கி விடுவர். கொடியை ஏற்றும் போதும், இறக்கும் போதும் அதனைப் பார்த்த வண்ணம் நின்று அதற்கு வணக்கம் செலுத்துவர்.

கொடியின் அமைப்பு தலைகீழாக இருக்கும்படி மாற்றிக் கட்டக்கூடாது. கொடிக் கம்பத்தின் உச்சியிலேயே கொடி பறக்க விடப்பட வேண்டும். நாட்டின் பொதுத் துக்க நாட்களில் மட்டும் கொடி தாழப் பறக்க விடப்படும். மாகாணங்களில் நடை பெறும் அரசாங்க சம்பந்தமான நிகழ்ச்சிகளில் மாகாணக் கொடியோடு, கூட்டரசுக் கொடியும் இடம் பெறும்.

மேன்மை தங்கிய பேரரசரின் பிரதிநிதிகளைத் தவிரப் பிறர் தம் மோட்டார்களின் மீது கூட்டரசுக் கொடியைப் பறக்க விடக்கூடாது. மாகாணச் சுல்தான்கள் ஒவ்வொருவரும் தத்தம் மாகாணக் கொடியைத் தத்தம் மோட்டார் வண்டிகளின் மீது பறக்க விடுவர்.

சமயத் தொடர்பான விழாக்களிலும், வியாபார அடையாளச் சின்னங்களிலும் கொடிகளையோ, கொடியின் சின்னங்களையோ உபயோகிக்கக்கூடாது.

நாட்டின் சின்னமாயிருப்பது கொடி, எனவே, கொடியை வணங்குவதன் மூலம் நாட்டையே வணங்குகிறோம் என்பதை ஒவ்வொருவரும் நன் குணர்ந்து கொடியைப் பெருமைப் படுத்தி வெற்றி யடைவோமாக.

பயிற்சிகள்:

1. விடை கூறு:

1. கொடியை ஏற்றும்போதும் இறக்கும் போதும் என்ன செய்ய வேண்டும்?
2. கொடியை மோட்டாரின் மீது பறக்கவிடும் தகுதி யாருக்குண்டு?
3. கொடியைத் தயாரிக்கும்போது கவனிக்க வேண்டுவன யாவை?
4. கொடியை எவ்வாறு பேண வேண்டும்?
5. இஸ்லாமிய சமயத்தைக் குறிக்கும் சின்னங்கள் என்னென்ன?
6. கொடியில் உள்ள பதினொரு பட்டைகள் எவற்றைக் குறிக் கின்றன?

2. நிறைவு செய்: 1. இங்குள்ளோர் அனைவரும் கூட்டரசுக் கொடியின் கீழ்...........

2. காமன் வெல்த் என்பது பொது நல...........

3. மலாயாக் கூட்டரசு பல நாட்டவர்...........

4. மாகாணங்களில் நடைபெறும் அரசாங்க...........

5. சுல்தான்கள் ஒவ்வொருவரும் தத்தம் மாகாண...........

3. மலாயா கூட்டரசு பல நாட்டவர், பல மொழியினர், பல சமயத்தினர் சேர்ந்து வாழும் நாடு—மலாயா கூட்டரசில் என ஆரம்பித்துப் பொருள் மாறுபடாமல் வாக்கியத்தை மாற்றி எழுது.

4. தங்கள் நாட்டுக் கொடி உயரப் பறக்கும் பொழுது மகிழ்கிறுர்கள்—இந்த வாக்கியத்தின் தோன்ரு எழுவாயைத் தோன்ற எழுது.

5. செயலில் + ஈடுபடுத்தவும், இங்கு + உள்ளோர், கூட்டு+அரசு, நாம்+அனைவரும், பழுது+ஆகாமல் இவற்றைப் புணர்த்தி எழுது.

6. கதிரவன் தோன்றியதும் கொடியை ஏற்றுவர்; கதிரவன் மறைந்ததும் கொடியை இறக்குவர். இவ்விரண்டு வாக்கியங்களையும் பொருள் கெடாமல் ஒரே வாக்கியமாக எழுது.

## 2. பேரரசரின் பதவி ஏற்பு விழா

1961-ம் ஆண்டு ஜனவரித் திங்கள், 4-ம் நாள் மலாயா மக்கள் அனைவருக்கும் மகிழ்வு தந்த பொன்னுளாகும். அன்று மாட்சிமை தங்கிய பெர்லிஸ் மன்னர் துவாங்கு சையத் புத்ரா அவர்கள், மலாயாக் கூட்டரசின் மூன்றும் "யாங் டி பெர்துவான் அகோங்" (பேரரசர்) ஆகப் பதவி ஏற்றூர்கள்.

அன்று மலாயாக் கூட்டாட்சியின் தலைநகரான கோலாலும்பூர் விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கும் கொடிகள், தேசீய மலர்கள் அமைந்த தட்டிகள் நகரை அழகு செய்தன. பாடசாலை மாணவ மாணவிகள் கொடிகளை வீசிய வண்ணம் மகிழ்ச்சி பொங்க ஆரவாரித்தனர்.

அதிகாலை முதல் பேரரசர் மாளிகையாகிய "இஸ்தாஞ நெகாரா"விலிருந்து, துங்கு அப்துல் ரஹ்மான் மண்டபத்தையடையும் சாலை நெடுக இரு மருங்கிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரள் திரளாக நின்று, பேரரசரையும், பேரரசியாரையும் கண்டு மகிழ்ந்தனர். வழி நெடுகக் கூட்டரசின் இராணுவப் படையினர் காவல் புரிந்து நின்றனர்.

அரசாங்க அலுவலக மணிக்கூண்டு, காலை மணி 10-15 ஆயிற்று என முழங்கியதும் பேரரசரும், பேரரசியாரும் விழா மண்டப வாயிலை அடைந்தனர். பிரதமர், துணைப் பிரதமர், பிரதம நீதிபதி, மேல் சபைத் தலைவர், மக்கள் சபைத் தலைவர், அமைச்சரவை உறுப்பினர்கள், அயல் நாடுகளின் அரசாங்கத் தூதுவர்கள் ஆகியோர் பேரரசரையும் பேரரசியாரையும் வரவேற்றனர்.

பேரரசர் தம்பதிகள் மரியாதை அணிவகுப்பைப் பார்வையிட்டதும், மரியாதை ஏற்கும் மேடைக்கு



படம் 1. பேரரசர்.



படம் 2. பேரரசியார்.

அழைத்துச் செல்லப்பட்டனர். மரியாதை அணி வகுப்பினர் தேசிய கீதம் இசைத்து மரியாதை செலுத்தினர். பின்னர், பேரரசர் தம்பதிகள் மண்டபத்தில் உள்ள காத்திருக்கும் அறையை அடைந்தனர்.



படம் 3. பேரரசர், பேரரசியார் மண்டபத்தில் அமர்ந்திருக்கும் காட்சி.

சரியாகக் காலை மணி 10-50-க்கு மங்கல வாத்திய இசை முழங்கிற்று. பேரரசரின் அரண்மனை நிருவாக அதிகாரி, விருதுகள் தாங்குவோர், செங் கோல் தாங்குவோர் முன் செல்ல, இராஜா பெர் மைசூரி அகோங் உடன் வர, பேரரசர் அவர்கள் மண்டபத்தை அடைந்து, தம் துணைவியாருடன் அரியணையில் அமர்ந்தார்கள். அந் நேரத்திற் கிட்டாவின் புகழ் பெற்ற "நோபாட்" வாத்திய இசைக் குழுவினர், அரச வாழ்த்துக் கீதம் இசைத் தனர்.

இஸ்லாமிய மத குரு திருக்குர்-ஆன் ஓதிப் பிரார்த்தனை செய்தார். அதைத் தொடர்ந்து



படம் 4. பிரதமர் முடி சூட்டு விழாப் பிரகடனத்தைப் படித்தல்.

அரண்மனை நிருவாக அதிகாரியால் கொண்டுவரப்பட்ட அரசாங்க குத்துவாள், பதவி ஏற்புப் பிரகடனம், பதவி ஏற்புப் பிரமாணப் பத்திரம் ஆகியன, சிம்மாசன மேடையின் முன்புறமிருந்த மேசையின் மீது வைக்கப்பட்டன.

பிரதமர் துங்கு எழுந்து, "மலாயாக் கூட்டாட்சியின் அரசியல் சட்டங்களுக்கு ஏற்ப, மலாயாச் சுல்தான்கள், மாட்சிமை தங்கிய துவாங்கு சையத் புத்தா அவர்களை மலாயாக்கூட்டரசின் பேரரசராகத் தேர்ந்தெடுத்திருப்பதால், இன்று அவர்கள் மலாயா கூட்டாட்சியின் அதிபராக, 'யாங் டி பெர்த்துவான் அகோங்' என்ற பட்டத்துக்குரியவராக முடி சூடியிருக்கிறார்" எனப் பிரகடனம் செய்தார்.

பின்னர், அரண்மனை நிருவாக அதிகாரி தந்த அரசாங்க குத்துவாளைப் பேரரசர் பெற்று, அதன்

உறையைக் கழற்றி முத்தமிட்டு, மீண்டும் உறையினுள் வைத்து, அருகிலிருந்த மேசையின் மீது வைத்தார். பிறகு, பேரரசர் பிரமாணப் பத்திரத்தை ஏந்தி, உரத்த குரலில்,



படம் 5. பேரரசர் அரசாங்கக் குத்துவாளை முத்தமிடுதல்.

"மலாயா கூட்டாட்சியின் பேரரசராகிய யாம், அரசியல் அமைப்பு விதிகளுக்கு ஏற்ப, மலாயாக் கூட்டாட்சியின் நிருவாகத்தை நீதியுடனும், நம்பிக்கையுடனும் செய்து வருவோம் என்றும், இஸ்லாமிய சமயத்தையும், நாட்டின் சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றையும் பாதுகாத்து வருவோம் என மனப்பூர்வமாகப் பிரமாணம் செய்கிறோம்" என மொழிந்தார்கள்.

உடனே அரண்மனை அதிகாரி "தௌலாத் துவாங்கு" என மும்முறை வாழ்த்த, மண்டபத்திலிருந்தோரும் சேர்ந்து வாழ்த்தினர். அதைத் தொடர்ந்து இருபத்தொரு மரியாதைக் குண்டுகள்



படம் 6. பேரரசர் பதவிப் பிரமாணம் செய்தல்.

முழங்கின; அரசாங்க கீதமாகிய "இராஜா பெர்டா பால்" இசைக்கப்பட்டது. சுல்தான்கள், ஆளுநர்கள் (கவர்னர்கள்) சார்பாகக் கிளந்தான் சுல்தான் அவர்களும், மக்கள் சார்பாகப் பிரதமர் அவர்களும் வாழ்த்துரை கூறினர்.

மறுபடியும் பிரார்த்தனை நிகழ்ந்தது. மீண்டும் வாத்தியம் இசைக்க, "நோபாட்" இசை முழங்க, மத குருவும், விருதுகள் தாங்குவோரும் முன் செல்ல, சுல்தான்கள், அமைச்சர்கள் உடன் வர, பேரரசர் தம்பதிகள் இஸ்தானா நெகாராவை அடைந்தனர்.

அன்று பிற்பகலில் சுல்தான்கள் முதலியோருக்குப் பேரரசரால் விருந்தளிக்கப்பட்டது. இரண்டாயிரம் பள்ளிச் சிறுர்கள் இஸ்தானா நெகாராவில் தேநீர் அருந்தினர். பலர் பேரரசரால் பட்டங்கள் அளித்து கௌரவிக்கப்பட்டனர்.

பேரரசரின் பதவி ஏற்பு விழாவை யொட்டி, மெர்டேக்கா ஆடலரங்கில் பற்பல கலைக் காட்சிகள் நடைபெற்றன. கோவில்களிலும், தேவாலயங்களி லும், பள்ளி வாசல்களிலும் பேரரசருக்காக வழிபாடு கள் நிகழ்ந்தன. உலகெங்குமிருந்து பேரரசருக்கு வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. வாழ்க நம் பேரரசர் என்று நாமும் வாழ்த்துவோமாக!

பயிற்சிகள் :

1. விடை கூறு: 1. பேரரசரின் பதவி ஏற்பு விழா எங்கு நடை பெற்றது?
   2. இஸ்தானா நெகாரா என்பது என்ன?
   3. பிரதமர் துங்கு, பதவி ஏற்பு விழா வின்போது கூறியதென்ன?
2. பேரரசர் பதவி ஏற்பு நாளன்று உன் ஊரில் நடை பெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளைப் பற்றிப் பத்து வாக்கியங் கள் எழுது.
3. மெர்தேகா ஆடரங்கில் பல கலைக் காட்சிகள் நடை பெற்றன—இவ் வாக்கியத்தில் உள்ள எழுவாய் பயனிலை, செயப்படுபொருள் யாது?
4. பேரரசருக்கு வாழ்த்துச் செய்திகள் கிடைத்தன—இவ் வாக்கியத்தைப் பேரரசர் எனத் தொடங்கிக் கருத்துக் கெடாமல் மாற்றி எழுது.
5. விழாக்கோலம், ஆரவாரித்து, இருமருங்கிலும், திரள் திரளாக, வழிநெடுக, மனப்பூர்வமாக, கௌரவிக்க— ஒவ்வொரு தொடரையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்தெழுது.
6. பிரகடனம், பிரமாணம், பத்திரம், சிம்மாசனம், பிரார்த் தனை, தம்பதிகள்—அகராதியைப் பார்த்துப் பொருள் எழுது.
7. அறிந்து கொள்: தௌலாத்-தூய-புநிதமான.
   துவாங்கு-மாட்சிமை தங்கிய.

# 3. நபிகள் நாயகம்

உலகப் பெருஞ் சமயங்களுள் இஸ்லாமும் ஒன்று. மலாயாவின் பேரரசரும், பிற சுல்தான் மாரும், மலாய்க்காரர்களும் இஸ்லாமிய சமயத்தவ ராவர். ஆகவே, இஸ்லாம் இந்நாட்டின் அரசாங்க மதமாயிருக்கிறது.



படம் 7. பள்ளிவாசல்.

மலாயா நாட்டுப் பள்ளிச் சிறுர்கள், இந்நாட்டு அரசாங்க மதத்தையும் அதன் அமைப்பாளரையும் அறிந்திருத்தல் மிக இன்றியமையாதது.

தென்மேற்கு ஆசியாவில் அரேபியா என்றொரு தீபகற்பமிருக்கிறது. அங்கு மக்கா என்னும் நகரமுண்டு. அதில் ஏறக்குறைய ஆயிரத்து நானூறு

ஆண்டுகட்கு முன், வணிகர் மரபில், அப்துல்லா—ஆமீனு என்பாரின் புதல்வராக முஹம்மது நபி தோன்றினர்.

முஹம்மது தம் தாயாரின் வயிற்றிலிருக்கும் போது தந்தையை இழந்தார். தம்முடைய ஆரும் வயதில் தாயாரையும் இழந்தார். பெற்ருேரை இழந்த முஹம்மது, அவருடைய பாட்டனர் அப்துல் முத்தலிபுவாலும், பின்னர் தம் பெரிய தந்தையருள் ஒருவரான அபூதாலிப் என்பவராலும் வளர்க்கப் பட்டார்.

அபூதாலிப் ஒரு வணிகர். அவர் வாணிகத்தின் பொருட்டுச் சிரியா தேசத்துக்குச் சென்றபோது, முஹம்மதுவின் வேண்டுகோளுக்கிணங்க அவரையும் தம்முடன் அழைத்துச் சென்ருர். இதனல் முஹம் மதுவுக்கு வாணிக அநுபவம் ஏற்பட்டது.

மக்கமா நகரில் கதீஜா என்னும் விதவைப் பெண்மணியொருவரிருந்தார். அவர் மிகுந்த செல்வ முடையவர். முஹம்மது அவருடைய வாணிகச் செயலாளராகச் சிரியாவுக்குச் சென்று வந்தார். முஹம்மதுவின் நேர்மையும், நற்குணங்களும் கதீஜா வின் உள்ளத்தைக் கவர்ந்தன. ஆகவே அவர் முஹம்மதுவை மறுமணம் புரிந்து கொண்டார். இம்மணத்தின் விளைவாக முஹம்மது பெருஞ் செல்வரானர்.

முஹம்மது, கதீஜா நாயகியாருடன் இல்லற வாழ்விலீடுபட்டிருந்தாலும், அவர் மனம் தனிமையை நாடிற்று. அவர் அடிக்கடி "ஹிரா" மலைக்குச் சென்று, அங்குள்ள குகையில் இறைவனைத் தியா

னித்து மீளுவார். ஒரு நாள் இரவு முஹம்மது ஹிரா மலைக் குகையில் தனித்திருக்கும்போது, ஜிப்ரீல் என்னும் தேவதூதர் அவர் முன்னே ஒளிப் பிழம்பாகத் தோன்றி ஆண்டவனுடைய சலாம் கூறினர். அவர் ஒரு மணியாடையைக் கையி லெடுத்து, முஹம்மதுவின் திருமுகத்தை நோக்கிக் கலிமா மந்திரத்தைக் கூறினர். பின்னர் அவ் வாடையை முஹம்மதுவின் வலக்கையில் வைத்து, "நாயகமே தங்களுக்கு ஆண்டவன் இன்று நபி என்னும் பட்டத்தை அருளியிருக்கிருன். ஆதலால் வேதத்தை ஓதுங்கள்" என்ருர்.

நாயகம் அவர்கள் தேவதூதரை நோக்கி, "நான் ஓர் எழுத்தையும் அறியேன்; வேதத்தை யும் ஓதினவனல்லேன்", என்ருர்கள். உடனே, தேவதூதர், நாயகம் அவர்களின் திருமேனியை மும்முறை அணைத்து, 'இப்பொழுது ஓதுங்கள்' என்ருர். நாயகம் அவர்களும் பழம்பாடத்தை மள மளவென ஒப்பிப்பது போல வேதத்தை ஓதத் தொடங்கினர்கள். அதனைச் செவி குளிரக் கேட்ட வானவர்கோமான் மனமகிழ்வோடு விண்ணுலகம் சென்றனர். நாயகம் அவர்களின் வாழ்க்கைப் பாதையும் இறைவனை நோக்கித் திரும்பலாயிற்று. நபிப் பட்டம் பெற்ற முஹம்மது, முஹம்மதுநபி என அழைக்கப்படலாயினர்.

அக்காலத்தில் அரேபிய மக்களிடையே பல தெய்வ வழிபாடுகள், தெய்வங்களுக்கு மனிதரையும் ஒட்டகங்களையும் பலியிடுதல், கல்வி இன்மை, பெண் மகவைக் கொன்று விடுதல், பெண்ணடிமை - பரத் தைமை, குடி, சூது, பழி வாங்குதல் போன்ற கொடிய பழக்க வழக்கங்கள் வேரூன்றியிருந்தன. ஆகவே, ஆண்டவன் தமக்கருளிய உண்மை

நெறியைத் தம் நாட்டவருக்கு உணர்த்தி, அவர்களை நல்வழிப்படுத்த நாயகம் அவர்கள் திருவுளங் கொண்டார்கள்.

"ஆண்டவன் ஒருவன்; அவன் உருவமற்றவன்; அவனே வணங்குவதற்கு உரியவன்" என முஹம்மது நபி முழங்கினர். தாம் ஆண்டவனின் இறுதித் தூதர் என்பதையும் விளக்கினர். ஆண்டவனை அருவமாக வணங்கும் தம்முடைய புது நெறிக்கு "இஸ்லாம்" எனப் பெயரிட்டார். இஸ்லாம் என்பது "சாந்தி பெறும் நெறி" எனப்பொருள்படும்.

முஹம்மது நபி அவர்களின் துணைவியாரான கதீஜா நாயகி அவர்களே முதன் முதலில் இஸ்லாமிய நெறியை ஏற்றார்கள். பின்னர் நபி அவர்களின் உறவினரும் மரபினருமான அலி, அபூ பக்கர், உமர் முதலியோர் இஸ்லாத்தை ஏற்றனர். அவர்களைத் தொடர்ந்து ஏழைகளும், அடிமைகளுமாயிருந்த பலர் இஸ்லாத்தைத் தழுவினர்.

முஹம்மது நபி அவர்களின் இஸ்லாமிய நெறி, தங்களின் பழைய கொள்கைகளுக்கு மாறாக விளங்குவதைக் கண்ட மக்கா நகர மக்களிற் பலர், முஸ்லிம்களைக் கேலிசெய்தனர்; கல்லால் அடித்தனர்; கட்டிவைத்து உதைத்தனர். அக்கொடுமைகளைத் தாங்கவியலாத முஸ்லிம்கள் அபிசீனியாவுக்குச் சென்று வாழலாயினர்.

உருவ வழிப்பாட்டுக் கொள்கையினரான மக்கா நகரத்தினரிற் பலர் முகம்மது நபியைக் கொன்று இஸ்லாமிய நெறியை அழித்துவிடக் கங்கணங் கட்டிக் கொண்டனர்.

ஒரு நாள் இரவு கலகக்காரர்கள் முஹம்மது நபி அவர்களைக் கொல்ல, அவருடைய வீட்டைச்

சூழ்ந்து கொண்டார்கள். ஆனால் நபி அவர்கள் தந்திரமாகத் தம் தோழர் அபூபக்கரோடு அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர். கலகக்காரர்கள் விடாது தொடர்ந்தனர். வழியிலிருந்த மலைக் குகை ஒன்றில் அவர்கள் மூன்று நாட்கள் பதுங்கியிருந்து, கலகக் காரர்கள் திரும்பியதும் மதீனாவை அடைந்தார்கள்.

மதீனா மக்கள் நாயகம் அவர்களை அன்புடன் வரவேற்று ஆதரித்தனர். அவர்களிற் பெரும் பாலோர் முஹம்மது நபி அவர்களை ஆண்டவனின் தூதராக ஒப்புக் கொண்டு இஸ்லாமிய நெறியைத் தழுவினர். எளிய முறையில் புதிய பள்ளிவாசல் ஒன்றும் எழுப்பப்பட்டது.

முஹம்மது நபி அவர்கள் மதீனா மக்களின் துணையால், மக்கா நகரக் கலகக்காரர்களைப் பலமுறை வென்று, இறுதியில் மக்கா நகரைத் தம் அடிப்படுத் தினர். மக்காவிலிருந்த கஃபா என்னும் பண்டைய ஆலயம் நபிகள் வசமாயிற்று. அது முஸ்லீம்களின் தொழுகையிடமாகவும் மாறி விட்டது.

தம்மை நிந்தித்தவர்களையும், தம்மோடு மாறு பட்டவர்களையும் நபி அவர்கள் மன்னித்து விட்டார் கள். இப் பெருங் குணத்தால் மக்கள் மனம் மாறிக் கூட்டங் கூட்டமாக இஸ்லாமிய நெறியைத் தழுவினர்; எங்கணும் இஸ்லாமியக் கொடி பறந்தது.

மக்கா, மதீனா வாழ் மக்களுக்கு அரசராகவும், வழிகாட்டியாகவும் விளங்கிய நபிகள் நாயகம் அவர்கள், தம் முதுமையில் உடல் நலங் குன்றி, மதீனா நகரில் இறைவனை அடைந்தார்கள். அவர் களின் திருமொழியான திருக் குர் - ஆனும், இஸ்லா மிய நெறியும் அவர்களின் புகழொளியை எங்கும் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

பயிற்சிகள்:

1. விடை கூறு: 1. முஹம்மது நபி அவர்களுக்கு ஆதரவு காட்டிய நாடு எது?
   2. மக்கா நகர மக்கள் முஹம்மது நபி அவர்களைக் கொல்ல முயன்றது ஏன்?
   3. முஹம்மது நபி அவர்களின் நெறி யாது? அதன் பொருள் என்ன?
   4. முஹம்மது நபி அவர்களுக்கு நபிப் பட்டம் யாரால் அருளப்பட்டது? எங்கு, எப்பொழுது அருளப் பட்டது?
   5. மலாயாவின் அரசாங்க மதம் யாது? அம்மதத்தைக் குறிக்கும் சின்னங்கள் யாவை?
2. அரேபியாவில் இஸ்லாம் பரவுமுன் இருந்த நிலையை விளக்கி ஒரு பத்தி எழுது.
3. ஒவ்வொரு தொடரையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.
   ஒளிப் பிழம்பாக, செவி குளிர, மன மகிழ்வோடு, இஸ்லாமிய நெறி, வேண்டுகோளுக் கிணங்க.
4. முஹம்மது நபி அப்துல் முத்தலிபுவால் வளர்க்கப்பட்டார் - வளர்த்தார் எனப் பயனிலை அமையும்படி வாக்கியத்தை மாற்று.
5. கதீஜா நாயகியார் முஹம்மதுவை மணம் புரிந்து கொண்டார் - கொள்ளப்பட்டார் எனப் பயனிலை அமையுமாறு வாக்கியத்தை மாற்று.
6. தென் மேற்கு, நானூறு, நற்குணம், மணியாடை, வேரூன்றி, திருவுளம், புகழொளி—பிரித்தெழுது.
7. அறிந்து கொள்: 1. கலிமா - "லாயிலாக இல்லல் லாகு முஹம்மதுர் றசூலுல் லாஹி," என்னும் மந்திரத் தொடர்.
   2. நபி-இறைவனின் திருத்தூதர்.
   3. சலாம் - வணக்கம்.



# 4. செவ்வரத்தம் பூ

வீடுகளைச் சுற்றியுள்ள தோட்டங்களிலும், பொதுப் பூங்காக்களிலும் செவ்வரத்தஞ் செடிகள் பயிராக்கப்படுகின்றன. சிலர் தோட்டங்களுக்கு வேலியாக அமையும்படி இவற்றைப் பயிராக்கு கிருர்கள்.

செவ்வரத்தஞ் செடி ஏறக்குறைய எட்டடி உயரம் வரை வளரும்; பத்தடிகளுக்கு மேல் வளரு கின்றவையும் உண்டு. இதனைப் பயிராக்க முற்றிய செடிகளிலிருந்து ஓரடி அளவுள்ள குச்சிகளாக வெட்டி எடுத்து, ஒரு வாரம் வரை ஈர மண்ணிற் புதைத்து வைப்பர். பின்னர், நன்ருகக் கொத்திப் பண்படுத்திய நிலத்தில் அவற்றை வரிசையாகவும், நெருக்கமாகவும் நடுவர். போதிய எரு இட்டு, ஒழுங் காக நீர் ஊற்றி வந்தால் நிறையப் பூக்கும்.

செவ்வரத்தஞ் செடியின் இலைகள் பசுமையும் பளபளப்பும் உள்ளவை. இலைகளின் விளிம்புகள் ரம்பம் போன்றிருக்கும். இலைக் கணுக்களிடையே பூக்கள் தோன்றித் தனித்தனியாகத் தொங்கும்.

செவ்வரத்தம் பூக்களில் நீலம், மஞ்சள், காவி, சிவப்பு, வெண்சிவப்பு எனப் பலவகையுண்டு. ஆனல், மலாயாவிற் பெரும்பாலும் சிவப்பு, வெண் சிவப்பு மலர்களே காணப்படுகின்றன.

செவ்வரத்தம் பூக்களின் இதழ் அமைப்பை யொட்டி, அவற்றை ஒற்றை இதழ்ப் பூக்கள், அடுக்கு இதழ்ப் பூக்கள் என இருவகைப் படுத்துவர்.

ஒற்றை இதழ்ப் பூவில் ஐந்து ஒற்றை இதழ் கள் உண்டு. அவை மேல் நோக்கி வளைந்திருக்கும்.

இதழ்களின் நடுவில் ஒரு மகரந்தக் காம்பு நீட்டிக் கொண்டிருக்கும். இதழ்களின் ஓரங்கள் கத்தரித்து விட்டது போல் வளைவு நெளிவாயிருக்கும்.

அடுக்கு இதழ்ப் பூ அழகும், மினுமினுப்பு முடையது; மிக மிருதுவானது. இதன் இதழ்கள் அடுக்கடுக்காய் ஒன்று சேர்ந்திருக்கும். இதழ்களின் நடுவே ஐந்து மகரந்தக் கதிர்கள் இருக்கும்.

செவ்வரத்தஞ் செடி ஆண்டு முழுவதும் ஓயாது பூத்துக் கொண்டிருக்கும். ஆனல், பூக்கள் மண மற்றவை; காலையில் மலர்ந்து மாலையில் வாடி வதங்கி உதிரக் கூடியவை; எனினும், தெய்வ வழிபாட்டிற்கு ஏற்றவை.

இப்பூக்களை வாயிலிட்டு மென்ருல் குழகுழப்பா யிருக்கும்; சிறிது இனிப்பாயிருக்கும். இவற்றைப் பச்சையாகவோ, உலர்த்தியோ கொதிக்கும் வெந் நீரில் இட்டுச் சாறு இறக்கி, அச்சாற்றுடன் பாலும், சர்க்கரையும் கலந்து பருகலாம். இது தேயிலைப் பானத்தை விடச் சுவையும், மணமும், குணமும் நிரம்பியது; உடற் சூட்டையும் கண்ணெரிச்சலையும் தணிக்கக் கூடியது.

மலாயாத் தோட்டக் கலைச் சங்கத்தினரின் 1960-ம் ஆண்டு மலர்க் காட்சியை, அவ்வாண்டு ஜூலையில் கனம் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் திறந்து வைத்தபோது, செவ் வரத்தம் பூவை மலாயாவின் "தேசிய மலர்" என அறிவித்தார்கள். இதனை மலாய் மொழியில் "பூங்கா ராயா" என்பர்.

செவ்வரத்தஞ் செடியின் தளிர், மொக்கு, மலர், வேர் அனைத்தும் மருந்தாகப் பயன்படுகின்றன.

ஆகவே, ஒவ்வொருவரும் செவ்வரத்தஞ் செடியைப் பயிரிட்டு அதன் பயனை நுகர வேண்டும். செம்பருத்தி, செம்பரத்தை என்பன இதன் வேறு பெயர்களாகும்.

பயிற்சிகள் :

1. ஓரடி, ஈரமண், வெண்சிவப்பு, மகரந்தக் கதிர், வெந்நீர், உடற்சூடு, கண்ணெறிச்சல், தோட்டக்கலை—பிரித்து எழுது.
2. அடுக்கடுக்காய், பெரும்பாலும், ஓரங்கள், வாடிவதங்கி, ஆண்டு முழுவதும்—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.
3. விடை கூறு: 1. செவ்வரத்தஞ்செடியைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?
   2. "பூங்கா ராயா" என்பதன் பொருள் யாது?
   3. அடுக்கிதழ்ப் பூவின் அமைப்பு எவ்வாறிருக்கும்?
   4. செவ்வரத்தம் பூவின் பயன் என்ன?
   5. செவ்வரத்தஞ் செடியைப் பயிரிடுவது எவ்வாறு?
4. மலர்—இப்பொருளைக் குறிக்கும் வேறு மூன்று பெயர்ச் சொற்களை எழுது.
5. மொக்கு—இதனைக் குறிக்கும் வேறு இரு பெயர்ச் சொற்களைக் கூறு.

# 5. சுவாமி சத்தியாநந்த பாரதியார் (1909—1961)

சுவாமி சத்தியானந்தா அவர்களை மலாயா மக்கள் அனைவரும் நன்கறிவர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பரின் திருமொழிக்கு அடிகளின் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டாய் இலங்கு கின்றது.



படம் 8. சுவாமி சத்தியானந்தா.

அடிகளின் இயற்பெயர் கைலாசம் என்பதாகும். இரண்டாம் உலகப் போருக்கு முன்னும், போர்க் காலத்திலும் அடிகள் "பிரமசாரி கைலாசம்" என்றே அழைக்கப்பட்டனர்.

அடிகள் 1909-ம் ஆண்டில் இலங்கையிற் பிறந் தார்; ஈப்போவிலுள்ள செயின்ட் மைக்கேல் உயர்

நிலைப் பள்ளியில் ஆங்கிலம் பயின்று தேறினர்; சில ஆண்டுகள் அரசாங்க அலுவலில் ஈடுபட்டார்; பின்னர், விவேகானந்தர், காந்தியடிகள் போன்றோரின் நெறியைப் பின்பற்றிப் பொது வாழ்விலிறங்கினர்; பகவான் இராம கிருஷ்ணரின் நேர் சீடர்களுள் ஒருவரான விஞ்ஞானனந்தரிடம் சமய நூற் பயிற்சி பெற்றார்; காந்தியடிகள், இரமண முனிவர், அரவிந்த முனிவர், தத்துவஞானி இராதா கிருஷ்ணன் ஆகியோரை நேரிற்கண்டு அளவளாவி, அவர்களின் ஆசியையும் பெற்றார்.

ஜப்பானியர் ஆட்சிக் காலத்தின்போது, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களால் மலாயாவிலும், சிங்கப்பூரிலும் நிறுவப்பட்ட இந்திய தேசிய இராணுவ அமைப்பில் அடிகளும் கலந்து கொண்டு, நேதாஜியின் உண்மை அன்பைப் பெற்றார். பின்னர், ஆங்கிலேயர் இந்நாட்டைக் கைப்பற்றி இந்தியர் பலரைச் சிறைசெய்து வழக்குத் தொடர்ந்த போது, அவர்களை விடுவிக்கும் பொருட்டு அமைந்த நிவாரணக் குழுவின் செயலாளராகப் பணியாற்றிப் பண்டித நேரு அவர்களின் பாராட்டைப் பெற்றார்.

1947-ம் ஆண்டில் புதுடில்லியில் நடைபெற்ற ஆசிய உறவு மாநாட்டுக்கு மலாயாத் தூதுக் குழுவின் தலைவராகச் சென்று அரிய ஆலோசனை கூறினர். சயாமிலும், ஜப்பானிலும் நடைபெற்ற புத்த சமய மாநாடுகளிற் கலந்து கொண்டு, புத்த சமய உண்மைகளை விளக்கினர். இதனல் அடிகளுக்குத் தத்துவ ஞான டாக்டர் பட்டம் கிடைத்தது.

1949-ம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற உலக சமாதான வாதிகளின் மாநாட்டிற்கு, மலாயாத் தூதுக் குழுவின் தலைவராகச் சென்றார். அப்

பொழுது தவயோகி சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களின் தொடர்பு அடிகளுக்கு உண்டாயிற்று. யோகியார் அடிகளுக்குச் "சத்தியாநந்த பாரதியார்" என்னுந் திருப் பெயரைச் சூட்டினார்.

கோலாலும்பூரிலிருந்து ஆறு கல் தொலைவில் பூச்சோங் சாலையில், "சுத்த சமாஜம்" என்னும் அறநிலையம் ஒன்று அடிகளாரால் அமைக்கப் பட்டிருக்கிறது. அதில் பெற்றோரற்ற குழந்தை களுக்காக ஆண் பெண் இல்லங்கள், சர்வ சமயப் பொது ஆலயம், பாடசாலைகள், அச்சகம், கைத் தொழிற்கூடம், வைத்தியசாலை ஆகியன உள்ளன. இதன் ஆதரவில் இயங்கும் தர்ம கல்விக் கூடத்தில் ஏறக்குறைய நானூறு பிள்ளைகள் கல்வி பயிலு கிறார்கள்.

"ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்பது சுத்த சமாஜத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இது பல்வேறு இனத்தவரையும், சமயத்தவரை யும், மொழியினரையும் தன்னலமற்ற அன்பினால் பிணைத்து வைத்திருக்கிறது. இதற்கு அடிகளின் அயரா உழைப்பே காரணமாகும். முன்னால் பிரிட் டிஷ் ஹைகமிஷனர் ஸர் ஜெரால்டு டெப்ளரும், அவருடைய துணைவியாரும், பிற சமூகப் பெரியார் களும் அடிகளின் சமாஜப் பணியை நேரிற் கண்டு பாராட்டிப் பேராதரவு காட்டியுள்ளனர். மலாயா கூட்டரசு ஆட்சினர், சுத்த சமாஜ நிர்வாகத்துக் காகத் தனிச் சட்டமொன்று இயற்றியிருக்கின்றனர்.

அடிகளின் பொதுத் தொண்டைப் பாராட்டி, மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் அவர்கள், அடிகளுக்குச் சமாதான நீதிபதிப் பட்டம் வழங்கிப் பெருமை படுத்தினர்.

இவ்வாறு மலாயாவின் சமூகத் தொண்டுகளுக்காகத் தம்மையே தியாகம் செய்து கொண்ட அடிகள், 1960-ம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 30-ம் நாள் இரவு, ஈப்போவிற்கு அருகே மோட்டார் விபத்துக்குள்ளானர்; பிடரியிலும், முதுகிலும், காலிலும் எலும்புகள் முறிந்திருந்தன. ஈப்போ வைத்திய சாலையிலும், கோலாலும்பூர் வைத்திய சாலையிலும் சிகிச்சைகள் நடைபெற்றன; நோய் குணமடையவில்லை. ஆகவே, 1961-ம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 9-ம் நாளன்று அடிகள் இறைவன் திருவடியையடைந்தனர்.

சுவாமி சத்தியாநந்தாவின் இழப்பு, ஈடு செய்ய முடியாததாகும். அடிகள் யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்னும் கொள்கையாளர்; அன்பும் பணிவும் நிறைந்தவர்; காட்சிக்கு எளியவர்; கடுஞ்சொல் மொழியாதவர். நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் அயர்வின்றி உழைத்தவர்; பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்குத் தாயும் தந்தையுமாக விளங்கியவர்; தமிழும் தமிழரும் உயர உழைத்தவர்.

தமிழ்க் கல்வியின் வளர்ச்சிக்காக அடிகள் செய்த பணிகள் பல. அவர் சில பள்ளிகளில் தலைமை ஆசிரியராயிருந்தார்; சில பள்ளிகளின் அமைப்பாளராயிருந்தார்; சிலாங்கூர்த் தமிழாசிரியர்களுக்குப் போதகாசிரியராய் விளங்கினர்; தமிழாசிரியர்களின் மாநாடுகளிலே தலைமை தாங்கி, அவர்களை நன்னெறிப் படுத்தும் ஆசானகத் திகழ்ந்தார்.

அடிகள் ஆழ்ந்தகன்ற கல்வியறிவுள்ளவர்; கற்றதன் வழி வாழ்ந்தவர்; பல ஆங்கில, தமிழ் வெளியீடுகளில் அடிகளின் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. தமிழிலும், ஆங்கிலத்திலும் பல

நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிருர்; சில குறட் பாக்களை மலாய் மொழியில் மொழி பெயர்த்துள்ளார். அடிகள் எழுதிய "மலாயா சரித்திரம்" இன்னும் தமிழ்ப் பாடசாலைகளிற் பாட நூலக விளங்குகின்றது.

பயிற்சிகள்:

விடை கூறு:
1. சுவாமி சத்தியாநந்தாவின் இயற்பெயர் யாது?
2. அடிகள் யாரிடம் சமய நூற் பயிற்சி பெற்ருர்?
3. அடிகளுக்கு ஆசி வழங்கிய பெரியார்கள் யாவர்?
4. அடிகள் தமிழ் வளர்ச்சிக்குச் செய்த பணிகள் யாவை?
5. இந்திய் தேசீய இராணுவம் எப்பொழுது, யாரால் நிறுவப்பட்டது?
6. அடிகளுக்கு சமாதான நீதிபதிப்பட்டம் யாரால் வழங்கப்பட்டது?
7. 'சுத்த சமாஜம்' என்பது குறித்துப் பத்து வாக்கியங்கள் எழுது.

அகராதியைப் பார்த்து பொருள் கூறு:—

அப்பர், இயற் பெயர், பிரமசாரி, நிவாரணம், தத்துவஞானம், யோகி, சமாஜம், தியாகம், நெறி, சிகிச்சை.

திசைச் சொற்கள்:

தமிழில் வந்து கலக்கும் வடமொழி யல்லாத பிறமொழிச் சொற்களைத் திசைச் சொற்கள் என்பர். இது பற்றிச் செந்தமிழ் பயிற்சி நூல் இரண்டாம் புத்தகத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஹைகமிஷனர், ஸெயின்ட், டாக்டர், சுல்தான், இராணுவம் என்பன திசைச் சொற்களாகும். இவற்றிற் குரிய தமிழ்ப் பெயர்களை எழுது.

**தெரிந்து கொள் :**

டாக்டர் என்னும் சொல் (மருத்துவரை) வைத்தியரை மட்டுங் குறிக்காது ; புலவர் எனவும் பொருள்படும். இப் பாடத்தில் வந்துள்ள டாக்டர் என்னும் சொல் புலவர் என்னும் பொருளிலேயே வந்துள்ளது.

## 6. தமிழ்ப் பாட நூல்களின் தந்தையர்

தமிழ்ப் பாடசாலைகளில் இப்பொழுது அழகிய வண்ணப் படங்களாகிய பலவகை நூல்கள் பாடப் புத்தகங்களா யிருக்கின்றன. பல்வகைப் பயிற்சி நூல்களையும் பயன்படுத்தி மாணவர்கள் மொழித் தேர்ச்சி பெறுகிறார்கள். இந்த அரிய வேலையில் இலங்கையிலும் தமிழகத்திலும் முதன்முதலாகப் பாட நூல்கள் எழுதி வெளியிட்டும், சிறந்த நீதி நூல்களுக் கும், சமய இலக்கியங்களுக்கும் உரை எழுதிப் பதிப் பித்தும் அரிய தமிழ்ப் பணி புரிந்தவர்கள் பலருளர். அவர்களுள் தலைசிறந்த மூவரைக் குறித்து இப் பாடத்திற் படிப்போம்.

ஆறுமுக நாவலர் (கி.பி. 1822—1876) சிவத் திரு. ஆறுமுக நாவலரவர்கள் ஈழம் தந்த அரிய புலவர்மணியாவர். இவர் இளமையில் பர்சிவல் பாதிரியார் பாடசாலையில் ஆங்கிலமும், சேனாதிராய முதலியார், சரவண முத்துப் புலவர் ஆகியோரிடம்



படம் 9. ஆறுமுக நாவலர்.

தமிழும் கற்றுத் தேறினர். பிறகு, பர்சிவல் பாதிரியாரின் பாடசாலையில் ஆசிரியரானர். அப் பாதிரியாருக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசானகவும் விளங்கினர். அவர் வேண்டுகோளுக் கிணங்க ஆங்கில மொழியிலிருந்த பைபிளை "விவிலியம்" என்னும் பெயரில் மொழி பெயர்த்தார்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கத் துறவு பூண்டவர் நாவலர் பெருமான். இவர் யாழ்ப்பாணத்திலும், தமிழகத்திலுள்ள சிதம்பரத்திலும் சைவ வித்தியாசாலைகள் நிறுவினர். மாணவர்கள் படிப்படியாக அறிவு வளர்ச்சி பெறும் பொருட்டு, "இலக்கண வினு விடை, இலக்கணச் சுருக்கம், பாலபாடங்கள், சைவ வினு விடை, பூமி நூல் ஆகியன எழுதி வெளியிட்டார். மேல் வகுப்புகளுக்குப் பயன் படும் வகையில் சூடாமணி நிகண்டு, திருக்குறள்

பரிமேலழகர் உரை, நன்னூல் காண்டிகை உரை முதலியவற்றைப் பதிப்பித்தார். நாவலர் பதிப்பு என்றால், அதற்கெனத் தனிச் சிறப்பு உண்டு. பிற் காலத்தில் இலங்கையில் பாட நூல்கள் எழுதிய பலரும் நாவலரையே தங்களின் வழிகாட்டியாகக் கொண்டனர்.



படம் 10. நமச்சிவாய முதலியார்.

தமிழ் உரை நடையை வளர்த்தவர்களுள் நாவலர் பெருமான் தலை சிறந்தவர். ஆகவே இவரை "வசன நடை கைவந்த வள்ளலார்" எனக் கூறுவர்.

நமச்சிவாய முதலியார் (கி. பி. 1876—1936). சென்னைத் தமிழ்ப் புலவர்களுள் நமச்சிவாய முதலி யாரும் ஒருவராவர். இப் பெரியார் பல உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகத் தொண்டு புரிந்தவர். தளரா முயற்சியுடையவர்; தமிழ்ப் பள்ளிகளின்

உயர்வுக்காக "நல்லாசிரியன்" என்னும் இதழை நடத்தியவர். இவர், ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்காகத் "திராவிட வாசகம்" என்னும் பெயரில் ஒரு பாடநூல் வரிசையும், அப்பாட நூல்களுக்குத் துணையாக அமையும் பொருட்டுச் சில சொற்றொடர் ஆக்கப் பயிற்சி நூல்களும் எழுதி வெளியிட்டார்; மாணவர்கள் எளிதாக இலக்கண அறிவு பெறச் சிற்றிலக்கண வினு விடை நூல்களும் இயற்றினர்.



படம் 11. மறைமலையடிகள்.

உயர்தர வகுப்பு மாணவர்களுக்காகத் "தமிழ்க் கடல்" வாசக வரிசையும், கட்டுரை நூல்களும், நாடகங்களும் இயற்றினர்; ஆத்திசூடி, வாக்குண்டாம் முதலிய நீதி நூல்களுக்கு உரை எழுதிப் பதிப்பித்தார். இவரைத் தற்காலப் பாட நூல்களின் தந்தை எனலாம்.

மறைமலை அடிகள் (கி. பி. 1876—1950). மறைமலையடிகள் பல்லவபுரம் தந்த மாபெரும் புலவராவர். இவரது இயற்பெயர் வேதாசலம் என்பதாகும். இவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிப் புலமை பெற்றவர்; இல்லறத் துறவு பூண்டவர்; நாவலர் பெருமானைப் போலச் சைவ சமயத்துக்காகவும், தமிழுக்காகவும் வாழ்ந்தவர்; தமிழிற் பிற மொழிச் சொற்கள் கலப்பதால் தமிழ்ச் சொற்கள் வழக்கிழந்து போகின்றன வென்பதைத் தமிழறிஞர்க்கு உணர்த்தியவர்; பிற மொழிச் சொற்கள் கலவாத தூய தமிழ் நடையில் பேசியும் எழுதியும் வழி காட்டியவர்; தனித் தமிழ் வளர்ச்சிக்கு வித்தூன்றியவர். ஆகவே, இவரை இன்றைய தமிழ் மறுமலர்ச்சியின் தந்தை என்பர்.

மறைமலையடிகளார் ஆரம்பப் பள்ளி மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்காகச் "சிறுவர்க்கான செந்தமிழ், இளைஞர்க்கான இன்றமிழ், அறிவுரைக் கொத்து" ஆகியன எழுதி வெளியிட்டுள்ளார்; உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக "முல்லைப் பாட்டு, பட்டினப்பாலை" ஆகிய நூல்களுக்கு உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். அடிகளார் எழுதிய "சாகுந்தல நாடக ஆராய்ச்சி, தமிழர் மதம், மாணிக்க வாசகர் வரலாறும் காலமும், வேளாளர் நாகரிகம்" முதலியவை உயர் வகுப்பு மாணவர்கள் படித்து மகிழத் தக்க ஆராய்ச்சி நூல்களாகும்.

பயிற்சிகள் :

1. விடை கூறு:
   1. விவிலியம் என்பது என்ன?
   2. நாவலர் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்காக எழுதிய நூல்கள் யாவை?

3. தற்காலப் பாட நூல்களின் தந்தையர் என யாரைக் கூறலாம்?
4. நாவலர்க்கும் மறைமலையடிகளாருக்கும் உள்ள ஒற்றுமைகள் யாவை?
5. சொற்றொடராக்கப் பயிற்சி நூல்கள் யாரால் எழுதப்பட்டன?
6. தூய தமிழ் நடை என்பது என்ன?
7. தனித் தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்டவர் யார்?

2. பின்வரும் சொற்றொடர்களைப் பிரித்து எழுது.

   வண்ணப்படம், தமிழகம், பிழையற, தமிழாசிரியர், நல்லாசிரியர், சொற்றொடராக்கம், சிற்றிலக்கணம், வாக்குண்டாம், மும்மொழி, தமிழறிஞர்.

3. ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு தொடரில் அமைத்து எழுது.

   பிழையற, கலப்பதால், உயர்தர, வழிகாட்டி, இன்றைய, தற்கால.

4. ஆசான், நிகண்டு, தொண்டு, மும்மொழி, வித்து, அறிவுரை—பொருள் கூறு.
5. மறைமலையடிகள் பல்லவபுரம் தந்த பெரும் புலவர் - பல்லவபுரத்தில் என அமையுமாறு வாக்கியத்தைப் பொருள் கெடாமல் மாற்றி எழுது.
6. மறைமலையடிகள், பாதிரியார் என்பன உயர்திணைப் பெயர்கள். இப்பாடத்திலிருந்து ஐந்து உயர்திணைப் பெயர்களை எழுது.
7. உயர்திணைக்குரிய பால்கள் யாவை? ஒவ்வொன்றையும் உதாரணத்துடன் எழுது.

## 7. தேசியப் பொருட்காட்சி நிலையம்

முன்னுளைய மனிதரிற் பலர் வாணிகங் காரண மாகவும், போர் காரணமாகவும், புது நாடுகளைக் காணவேண்டும் என்னும் விருப்பங் காரணமாகவும் நாடு விட்டு நாடு போயினர் ; கண்டம் விட்டுக் கண்டம் சென்றனர். அவ்வாறே சென்றவர்கள், தாங்கள் பார்த்த நாடுகளிற் கிடைத்த சிறந்த கலைப் பொருட் களைத் தங்கள் நாடுகளுக்குக் கொண்டு சென்று, அக்கம் பக்கத்திலிருந்தவர்களிடம் காட்டி மகிழ்ந் தனர்.

நாட்டுப்பற்று மிகுந்த ஐரோப்பியரிற் பலர் வெளிநாடுகளிற் கிடைத்த விலையேறப் பெற்ற அரிய பொருள்களைத் தத்தம் மன்னருக்குக் காணிக்கை யாக அளித்து நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றனர்.

இந்தியா முதலிய கீழை நாடுகளின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த கிழக்கிந்திய வாணிகக் குழுவினர், இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் இருந்த சிற்பங்கள், ஓவியங்கள், ஏட்டுச் சுவடிகள், கல் வெட்டுக்கள், அணிமணிகள், போர்க் கருவிகள் முதலியவற்றை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத் தனர். புதுமை காண விரும்பிப் பிற கண்டங் களுக்குச் சென்று திரும்பிய வேறு சிலரும் பற்பல விந்தையான பொருள்களைக் கொண்டு வந்தனர். இவை அனைத்தும் மக்கள் பார்வைக்காக ஒரு பொது இடத்தில் வைக்கப்பட்டன. காட்சிக்குரிய பொருள் கள் மேலும் மேலும் வந்து குவிந்தன. காட்சிக்குரிய இடமும் விரிந்து, உலகிற் பெரிய பிரிட்டிஷ் தேசியப் பொருட்காட்சி நிலையமாக வளர்ந்துள்ளது.



படம் 12. மியூசியக் கட்டடம்.

தங்கள் தாய்நாட்டில் தேசியப் பொருட்காட்சி நிலையம் அமைத்துப் பேரும் புகழ் பெற்ற ஆங்கில மக்கள், தங்களின் ஆளுகையிலிருந்த நாடுகளிலும் தேசியப் பொருட்காட்சி நிலையங்களை உருவாக்கினர். இன்று இந்தியா, இலங்கை, மலாயா, சிங்கப்பூர் முதலிய கீழை நாடுகளில் காணப்பெறும் காட்சி நிலையங்கள் அனைத்தும் ஆங்கில ஆட்சியினரால் அமைக்கப்பட்டவையே.

மலாயாவின் பெரு நகரங்களான பினங்கு தைப்பிங், கோலாலும்பூர் போன்ற இடங்களில் தேசியப் பொருட்காட்சி நிலையங்கள் இருக்கின்றன.

இவை, மலாயாவின் முற்கால, தற்காலப் பண்பாட்டுக் கலைக் கூடங்களாகத் திகழ்கின்றன. இங்கு மன்னர்களின் அரியணைகள், பழங்காலப் போர்க் கருவிகள், படகுகள், பழங்கால மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு உதவிய கருவிகள், வீட்டுச் சாமான்கள் முதலியவற்றைக் காணலாம்.

தவிர மலாயாவின் பல்லி முதல் மலைப்பாம்பு வரையிலுமுள்ள பிராணிகள், சிட்டுக்குருவி முதல் கழுகு வரையிலுமுள்ள பறவைகள், சருகுமான் முதல் குரங்கு, யானை, புலி ஈறாக உள்ள விலங்குகள், மண், கல் வகைகள், டுரியான் முதலிய கனி வகைகள், நெல் முதலிய வித்துக்கள், ஈயம், இரும்பு முதலிய உலோகங்கள், புலி, பாம்பு போன்ற உயிர்களின் எலும்புக் கூடுகள், மனித எலும்புக்கூடு, யானையின் மண்டையோடு போன்றவையும் உள்ளன. ஈயம் எடுக்கும்போது, நிலத்தினடியிலிருந்து அகழ்ந்தெடுக்கப் பெற்ற புத்தர் சிலை முதலியனவும் உள்ளன.

காட்சிக்குரிய ஊர்வன, பறப்பன, நீந்துவன யாவும் உயிரோடிருப்பவைபோல் தோற்றமளிக்கும்படி பக்குவமாகப் பதனிடப்பட்டுக் காற்றுப் புகாத கண்ணாடி அலமாரிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. பிற பழங்கள், வித்துக்கள், கல்வகைகள், மணி வகைகள், உலோக வகைகள், எலும்புக்கூடுகள் அனைத்தும் தனித்தனியே கண்ணாடிப் பெட்டிகளில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கின்றன.

இப்பொருட்காட்சி நிலையங்கள் மலாயா மாணவ, மாணவியர்களின் ஆராய்ச்சி உணர்வை எழுப்பி, அவர்களைச் சிறந்த வரலாற்று அறிஞர்களாக மாற்றும். ஆகவே, மாணவர்கள் விடுமுறை நாட்

களில் தேசியப் பொருட்காட்சி நிலையத்துக்குச் சென்று, தங்களின் அறிவைப் பெருக்கிக் கொள்வது நல்லது.

பயிற்சிகள் :

1. விடை கூறு : 1. கீழை நாடுகள் என்பன யாவை ?
2. பிரிட்டிஷ் தேசியப் பொருட்காட்சி நிலையம் எவ்வாறு ஏற்பட்டது ?
3. மலாயாவில் எங்கெங்குப் பொருட்காட்சி நிலையங்கள் இருக்கின்றன ?
4. பொருட்காட்சி நிலையங்களில் காணப்படும் பொருள்கள் என்னென்ன ?
5. பொருட்காட்சி நிலையங்களால் உண்டாகும் நன்மைகள் யாவை ?

2. பொருள் கூறு :
காணிக்கை, கீழை நாடு, ஈருக, கண்டம், அகழ்ந்து.

3. பகைவர், சோம்பல், பலவீனம், மென்மை, முடி, நகர்ப்புறம், வளைவு, மறுத்தல், இனிப்பு, கிராக்கி—எதிர் மறைச் சொற்கள் எழுது.

4. தேசியப் பொருட்காட்சி நிலையங்கள் மலாயாவின் முற்கால, தற்காலப் பண்பாட்டுக் கலைக் கூடங்களாகத் திகழ்கின்றன—இதனை எதிர்கால வினைமுற்று வாக்கியமாக மாற்றி எழுது.

5. கீழை நாடுகளில் காணப்பெறும் காட்சி நிலையங்கள் அனைத்தும் ஆங்கில ஆட்சியினரால் அமைக்கப் பட்டவையே—இதனை, அமைத்தனர் என்னும் பயனிலையைக் கொண்டு, முடிவுறும் வாக்கியமாக மாற்று.

# 8. பொது நூலகங்கள்

"பாடம் ஏறினும் ஏடது கை விடேல்" என்பது முதுமொழி. கல்வி கரை இல்லாதது. கற்றற்குரிய நூல்களும் கணக்கற்றவை. பாடசாலைக் கல்வியோடு கற்றல் தொழில் நிறைவு பெறவில்லை. பாடசாலைகளில் ஒவ்வொருவருக்கும் அடிபடைக் கல்வி அறிவு மட்டுமே அளிக்கப்படுகின்றது.



படம் 13. நூல் நிலையத்தின் உட்பகுதி
(அலமாரிகளும் நூல்களும்)

நாட்டு மக்களின் அறியாமையை அழித்து, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டுமானல், பாடசாலைகளோடு நூலகங்களும் இணைந்து செயற்பட வேண்டும். கல்வியறிவை நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிமையாக்கிக் கல்லாமையை ஒழித்துக் கட்டுவதற்குப் பொது நூலகங்கள் மிக இன்றியமையாதவை.

பணச் செலவைப் பொருட்படுத்தாமல் ஏராள மான நூல்களை வாங்கிக் கற்கச் சிலரால் மட்டுமே முடியும்; பலரால் முடியாது. ஆகவே வசதி மிகுந் தோரும், வசதி குறைந்தோரும், வசதியற்றவரும் தங்கள் கல்வியைத் தொடருவதற்குப் பொது நூல கங்கள் உறுதுணையாகத் திகழ்கின்றன.

பண்டை நாட்களிற் கோயில்களிலும், தேவால யங்களிலும், அரசர் மாளிகைகளிலும், துறவிகள் வாழும் மடங்களிலும் நூல்கள் சேகரித்துப் பாது காக்கப்பட்டன. ஆனல், அவை பொது மக்களோடு தொடர்பு கொள்ளாமல் தனித் தனிக் குழுவினரின் ஆளுகையிலோ, தனி மனிதரின் பொறுப்பிலோ இருந்தன. அந்நூல்களைக் கற்கப் பொது மக்கள் அனுமதிக்கப்படவில்லை.

தற்காலத்துப் பொது நூலகங்கள் அரசினரின் ஆதரவோடும், செல்வர்களின் பொருளுதவியோடும் அமைக்கப்படுகின்றன. மக்கள் இன, சமய, பால் வேறுபாடின்றிப் பொது நூலகங்களுக்குச் சென்று, விரும்பிய நூல்களை எடுத்துப் படிக்கலாம்; செய்தித் தாள்களையும், வார, மாத வெளியீடுகளையும் வாசிக் கலாம்.

பொது நூலகங்களில் இலக்கியம், அறிவியல், வரலாறு, தத்துவம் முதலிய பல்துறை நூல்களையும் தேர்ந்தெடுத்து, வாங்கித் தொகுத்து, அழகிய கண்ணுடி அலமாரிகளிற் பாதுகாப்பாக வைத்து, அனைவருக்கும் படிக்க வழங்குகின்றனர்.

நூல்கள் பொருள் வாரியாகப் பிரிக்கப்பட்டு அந்தந்தப் பிரிவிற்குரிய குறியீட்டு எண்கள் இடப் பட்டுத் தனித்தனி அலமாரிகளில் வைக்கப்பெறும்.

மாணவ மாணவியர் படித்தற்கேற்ற நூல்கள், அவர்கள் எளிதாய் எடுத்துப் படிப்பதற்கேற்றவாறு திறந்த அலமாரிகளில் வைக்கப்பட்டிருக்கும்.

வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்காகத் தனித் தனி மேசைகளும், நாற்காலிகளும் போடப்பட்டிருக்கும். ஆராய்ச்சியாளர்கள் தமக்கு வேண்டிய குறிப்புக்களைத் தயாரித்துக்கொள்ளத் தனியிடங்கள் உண்டு. படிப்பவர்கள் மௌனமாகப் படிக்க வேண்டும்; வாய்விட்டு உரக்க வாசித்தலாகாது.

பொது நூலக உறுப்பினர்கள் மூவகைப்படுவர். ஒரு சாரார் ஆயுட்கால உறுப்பினர். மற்றொரு சாரார் சாதாரண உறுப்பினர். வேறொரு சாரார் மாணவ உறுப்பினர்.

ஒரே முறையில், குறித்த ஒரு தொகையைச் செலுத்துபவர் ஆயுட்கால உறுப்பினர். ஆண்டு தோறும் குறித்த கட்டணத்தைச் செலுத்துபவர் சாதாரண உறுப்பினர். இவ்விரு சாராருக்கும் ஆண்டுதோறும் நடைபெறும் நிருவாகத் தேர்தலில், நிருவாகக் குழுவைத் தேர்ந்தெடுக்க வாக்களிக்கும் உரிமையுண்டு.

மாணவ உறுப்பினரிடம் குறைந்த கட்டணமே வாங்கப்படுகின்றது. இவர்களுக்கு வாக்குரிமையில்லை. உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பதிவு இலக்கம் உண்டு.

உறுப்பினர்கள் மட்டும் நூல்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று படிக்க அனுமதிக்கப்படுவர். வாசகர்க்கு நூல்களை எடுத்துக் கொடுக்கவும், திரும்பப் பெறவும் நூலகப் பணியாளர்கள் பலர் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

பொது நூலகங்களுக்குப் படிக்கச் செல்லுவோர் புத்தகங்களிலுள்ள படங்களைக் கிழிக்காமலும், நூல்களிடையே கோடுகளிடாமலும், தாள்களை மடிக்காமலும் கவனமாகப் படித்துவிட்டுக் கொடுக்க வேண்டும். அங்குள்ள நூல்கள் மக்கள் அனைவர்க்கும் பொது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து, பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும்.

### பயிற்சிகள் :

1. விடை கூறு:
    1. புத்தகங்களை நூலகத்திலிருந்து வீட்டிற்குக் கொண்டு வந்து படிக்கும் உரிமை யாருக்கு உண்டு ?
    2. தற்கால நூலகங்கள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன ?
    3. மாணவர் படிப்பதற்குரிய நூல்கள் நூலகங்களில் எவ்வாறு வைக்கப் பட்டிருக்கும் ?
    4. நூலகங்களில் நூல்களை எங்கு, எவ்வாறு வைத்திருக்கின்றனர் ?
    5. நூலகங்களில் அமர்ந்து படிப்பவர்கள் கவனிக்க வேண்டுவன யாவை ?

2. பிரித்து எழுது. விவேகானந்தர், உலகப்போர், போதகாசிரியர், சமயநூல், நூலகம், பணச் செலவு, பண்டை நாள், தேவாலயம்.

3. பொருள் கூறு. அறியாமை, கல்லாமை, அருகாமை, கொல்லாமை, கேளாமை, சேராமை, சோராமை, கடலாமை, ஆற்ருமை, கோணுமை.

4. பாடசாலை என்பது பிள்ளைகள் கல்வி பயிலும் இடம். நூல் நிலையம் என்பது பொதுமக்கள் வந்து படிக்கும் இடம். இவ்வாறு ஓர் இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும். இப்பாடத்திலிருந்து ஐந்து இடப்பெயர்களை எழுது.
5. நாட்டு மக்களின் அறியாமையை அழிக்கவேண்டும்; அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும். ஒரே தொடராக்கு.
6. பொது நூலகங்கள் அரசினரின் ஆதரவோடும் செல்வர்களின் பொருளுதவியோடும் அமைக்கப்படுகின்றன—இதனை இரு சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

# 9. நூல்களைப் பாதுகாத்தல்

பழங்கால மக்கள் விலங்கு நிலையிலிருந்த காலத்தில் அவர்களிடையே மொழிகள் இல்லை. பகலிற் சைகை மூலம் ஒருவர் எண்ணத்தை இன்னொருவருக்குப் புலப்படுத்தினர்; இரவிற் பறவைகளைப் போலவும், விலங்குகளைப் போலவும் பல்வகை ஒலிகளை எழுப்பித் தங்கள் கருத்துக்களை ஒருவருக்கொருவர் உணர்த்திக் கொண்டனர்.

பன்னெடுங் காலத்திற்குப் பிறகு ஒலிகள் பேச்சு வடிவமெய்தின. ஒலியுருவமுடைய பேச்சு மொழிக்கு எழுத்துருவம் தர எண்ணியதன் விளைவாகச் சித்திரங்கள் தோன்றின. இச் சித்திரங்களே மொழிகளின் வரி வடிவத்திற்குரிய மூலங்களாகும்.

மொழிகளின் மூலங்களான சித்திரங்களைப் பழைய மக்கள், தாங்கள் வாழ்ந்த குகைச் சுவர்களி

லும் பாறைகளிலும் கரி முதலியவற்றைக் கொண்டு தீற்றினர். இச் சித்திரங்கள் பற்பல மாறுதல்களைப் பெற்றுச் சித்திர எழுத்துக்களாயின.



படம் 14. நூல்களின் தொகுப்புகள்.

பாறைகளிற் சித்திரங்களை எழுதிப் பழகிய மக்கள், சித்திர எழுத்துக்களைப் புல், இலை, ஓலை, மரத்திலிருந்து உரித்தெடுத்த பட்டை, வேட்டையாடிக் கொன்ற விலங்குகளின் தோல் ஆகியவற்றின் மீது எழுதினர். இவ்வாறு எழுதப்பட்ட ஏடுகளைச் சிலர் ஒன்ருகச் சேர்த்துக் கட்டி வைத்துக் கொண்டனர்; சிலர் சுருட்டி வைத்துக் கொண்டனர். இவையே பழங்காலச் சுவடிகள் அல்லது புத்தகங்கள் ஆகும்.

சீனர்கள் மிகப் பழங் கால முதலே காகிதம் செய்ய அறிந்திருந்தனர். அவர்கள் தங்களின் சித்தர எழுத்துக்களைக் காகிதங்களில் எழுதி, அவற்றைப் புத்தகங்களாக்கி வைத்துக் கொண்டனர்.

பெரு மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலும், கடல் பொங்கி எழுந்து ஊருக்குள் புகுந்தாலும், வீடுகள் நீருக்குள் ஆழ்ந்து சுவடிகள் அழிவெய்தின.

கல்லாத மூடர்களிற் பலர் பழங்கால ஏடுகளின் அருமையை உணராமல் அவற்றை அடுப்பில் வைத்து எரித்தனர்; நீர்ப்பெருக்கில் எறிந்தனர்.

பிற நாட்டுப் படையெடுப்பாளர்கள் தாங்கள் வெற்றி கொண்ட ஊர்களிலிருந்த சுவடிகளைத் தீக்கிரையாக்கினர். ஆகவே, தீ, பகைவர் படையெடுப்பு ஆகியவற்றிலிருந்து நூல்களைப் பாதுகாக்க எண்ணிய சிலர், அவற்றை இருட்டறைகளிற் போட்டுப் பூட்டி வைத்தனர்.



படம் 15. ஓலைச் சுவடிகள்.



படம் 16. கல்வெட்டு.

பகலவன் ஒளியை விரும்பாத கறையான்கள், இராமபாணப் பூச்சிகள் முதலியன சுவடிகள் வைக்கப்பட்டிருக்கும் இருட்டறைகளுட் புகுந்து, அவற்றை அரித்தும் துளையிட்டும் பாழ்படுத்தின.

பல சங்க இலக்கியங்கள், பல தேவாரப் பாடல்கள், முத்தொள்ளாயிரப் பாடல்கள், வளையாபதிச்

செய்யுட்கள் போன்றவை அழிந்தும், சிதைந்தும் போனமைக்குக் கறையான் முதலியவை ஒரு காரண மாகும்.

சுவடிகள் எளிதில் அழிந்து போவதைக் கண்ட சிலர் தங்கள் எழுத்துக்கள் நீண்ட நாட்கள் நிலைத் திருக்கப் பற்பல முயற்சிகளை மேற்கொண்டனர்.



படம் 17. செப்பேடு.

பாபிலோனியர் ஈரக் களிமண் கற்களில் எழு தினர்; இஸ்ரேலருக்குரிய பத்துக் கட்டளைகள் பாறைக் கற்களில் பொறிக்கப்பட்டன; புத்தரின் பொன்மொழிகள் அசோக மன்னனால் கற்களில் செதுக்கப்பட்டன. தமிழக மன்னர்கள் தங்களின் மெய்க் கீர்த்திகளையும், கட்டளைகளையும் கல்லிலும் செம்பிலும் பொறித்தனர். கல்லில் எழுதப்பட்டது, கல் வெட்டு எனவும், செம்பில் எழுதப்பட்டது, செப்புப் பட்டயம் எனவும் கூறப்பட்டன.

நம்முடைய முன்னோர் நமக்காகத் தேடித் தொகுத்து வைத்துள்ள அறிவுத் திரள்களின் தொகுதிகளையே நாம் சுவடிகள், புத்தகங்கள், நூல் கள், பநுவல்கள் என மொழிகிறோம். இவற்றை அழியாது காத்து நம் பின்னோருக்கு உதவுவது நம் முடைய கடமையாகும்.

பண்டை நாட்களை விட இந்நாட்களில் நூல்கள் எண்ணற்றனவாகப் பெருகியுள்ளன. பெருகி வரும்

நூல்களுள் நமக்குத் தேவையானவற்றை வாங்கிப் படிப்பதும் பாதுகாப்பதும் மிக இன்றியமையாததாய் விட்டது.

அறிவியலின் துணை கொண்டு மழமழப்பான, பூச்சி அரிக்காத தாள்களில், மங்கிப் போகாத-மையால், பல வண்ணங்களில் அச்சிட்ட உறுதியான புத்தகங்கள் இன்று வெளிவருகின்றன. சில நூல்கள் பட்டாடை பூண்டு பொன்னெழுத்துக்களுடன் வெளி வருகின்றன; சில தோலாடை தரித்து உலவுகின் றன; சில காகித அட்டை பூண்டு காட்சியளிக் கின்றன. இவற்றை வாங்கிப் படித்து விட்டு மூலையில் எறிந்து விடாமற் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

வீடுகளிலும் பாடசாலைகளிலும் ஆண்டுதோறும் கலைமகள் விழா அல்லது சரசுவதி பூசை நடைபெறு கின்றது. புத்தகங்களை ஆண்டுக்கொரு முறையாவது தூசி தட்டித் துப்புரவு செய்து பாதுகாக்க வேண்டு மென்பதற்காகவே இவ்விழாவை நம் முன்னோர் ஏற்பாடு செய்துள்ளனர்.

புத்தகங்களைப் பாதுகாக்கப் பல முறைகள் உள்ளன. அவற்றுட் சில வருமாறு:

1. படிக்கும்போது புத்தகத்தின் அட்டையைப் பின்புற மாக வளைத்தலாகாது. பிரித்தபடியே கவிழ்த்து வைக் கலாகாது.
2. அடையாளத்துக்காகப் புத்தகத்தினுடைய தாள்களை மடிப்பதும், குறிப்புக்களெழுதுவதும், கோடுகள் வரை வதும் புத்தகத்தின் அழகைக் கெடுத்துவிடும்.
3. குழந்தைகளுக்கு அருகிலோ குழந்தைகள் எட்டி இழுக்கக்கூடிய நிலையிலோ புத்தகங்களை வைத்தலா காது.

4. எண்ணெய்யோ, தண்ணீரோ பட்ட கையால் புத்தகத்தைத் தொடலாகாது. புத்தகத்தைத் தலையணையாக உபயோகித்தலும், கோபம் உண்டாகும்போது மேசை மீது அடித்தலும், பிள்ளைகள் மீது எறிதலும் தவறான செய்கைகளாகும்.

5. புகை, வெயில், மழை நீர் முதலியன புத்தகங்களைத் தாக்காதவாறு கவனித்துக் கொள்ள வேண்டும்.

6. மறதியும் அசட்டையுமுடைய நண்பர்களுக்குப் புத்தகங்களை இரவலாகக் கொடுத்து அவற்றை இழந்து விடக்கூடாது.

7. கட்டுக் குலைந்துபோன நூல்களை மறுபடியும் தைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

8. புத்தகங்களை அவற்றிற்கென உள்ள அலமாரிகளில் ஒழுங்காக அடுக்கி வைத்துத் தேவையானபோது எடுத்துப் படிக்கவேண்டும். படித்து முடிந்த பின் எடுத்த இடத்தில் ஒழுங்காக வைக்கவேண்டும்.

9. இராமபாணப் பூச்சிகள், கரப்பான் பூச்சிகள் முதலியன நூல் அலமாரிகளை அணுகாதவாறு "நெப்தலின்" போன்ற மருந்து உருண்டைகளை அலமாரிகளிற் போட்டு வைக்கவேண்டும்.

10. பொதுவாகப் புத்தகங்களைச் சிறந்த செல்வங்களாகக் கருதிப் பிள்ளைகளைப் பேணுவது போலக் கவனமுடன் பாதுகாக்க வேண்டும்.

### பயிற்சிகள் :

1. விடை கூறு :
   1. பழங்காலச் சுவடிகள் என்பவை யாவை ?
   2. பழஞ் சுவடிகளை ஏன் இருட்டறைகளில் பூட்டி வைத்தனர் ?

3. புத்தகங்களை அரிக்கும் பூச்சிகள் யாவை?
4. பத்துக் கட்டளைகள் யாருக்குரியவை? அவை எங்குப் பொறிக்கப்பட்டன?
5. கலைமகள் விழாவின் நோக்கம் யாது?
6. புத்தகம் - இதனைக் குறிக்கும் வேறு நான்கு பெயர்ச் சொற்கள் எழுது.

2. வாக்கியத்தில் அமைத்து எழுது.

நிலையிலிருந்த, பல்வகை, பொங்கி எழுந்து, அருமையை, முயற்சிகளை, தொகுதிகளை, பாதுகாக்க.

3. பிரித்து எழுது.

எழுத்துருவம், அழிவெய்தின, இருட்டறை, இராமபாணம், அறிவியல்.

4. ஒரே தொடராக்கு.

குழந்தைகளுக்கு அருகில் புத்தகங்களை வைக்கலாகாது. குழந்தைகள் எட்டி இழுக்கக்கூடிய நிலையில் புத்தகங்களை வைக்கலாகாது.

5. புத்தகங்களைச் சிறந்த செல்வங்கள் எனக் கருதிப் பிள்ளைகளைப் பேணுவதுபோலக் கவனமுடன் காக்க வேண்டும் - இதனை இரு தனி வாக்கியங்களாக்கு.

6. தண்டித்தல், இவை, செய்வினை, ஊழியன், ஆணவம், பெருக்கு, கோணலான, தொகுதி - எதிர்ச் சொல் கூறு.

# 10. தைப்பூசத் திருவிழா

மலாயா பல இனத்தவர் வாழும் நாடு. இங்கு இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய நான்கு சமயக் கொள்கையினர் வாழுகின்றனர். ஒவ்வொரு சமயத்தினரும் பற்பல விழாக்களைக் கொண்டாடுகின்றனர். இன்றியமையாத எல்லாச் சமய விழாக்களுக்கும் அரசினரால் பொது விடு முறை அளிக்கப்படுகிறது.

விழா என்றால் கொண்டாட்டம் எனப் பொருள் படும். இது பல வகைப்படும். சில வீடுகள்தோறும் நடைபெறும்; சில பொது இடங்களில் கொண்டா டப்பெறும்; சில பாடசாலைகளில் மட்டும் நடை பெறும். ஆனால், இவை அனைத்தும் "திருவிழா" என்னும் பெயர் பெற மாட்டா.

திருவிழா என்பது, திருக்கோவில்களில் நடை பெறும் தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம், சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளையே குறிக்கும். எனினும், மலா யாவிலுள்ள இந்து மக்கள் தைப்பூசத் திருவிழா வையே மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

தைப்பூசத் திருவிழா பினாங்கு, ஈப்போ, குவாலாலும்பூர், சிங்கப்பூர் ஆகிய பெரு நகரங்களி லுள்ள முருகன் திருக் கோவில்களில், தைமாதத்து முழுமதி நாளன்று கொண்டாடப்படும்.

விழா நடைபெறும் நாளன்று திருக்கோவில் களின் உள்ளும் புறமும் தூய்மையாயிருக்கும்; நாற் புறமும் தோரணங்கள் கட்டப்பட்டிருக்கும்; முகப் பில் வாழையும் கமுகும் மாவிலையும் அழகு செய்யும்; உட் புறத்திற் பல வண்ண விளக்குகள் அணி செய்யும்.



படம் 18. தைப்பூசத் தேர் நகர் வலக் காட்சி.

நேர்த்திக் கடன் செலுத்த விரும்பும் அன்பர்கள், கோவிலுக்கு அருகிலோ சற்றுத் தொலைவிலோ ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றில் நீராடி, ஈரமுள்ள மஞ்சள் ஆடைகளோடு காட்சியளிப்பர்; நோன்பு நோற்றதன் காரணமாக அவர்களின் உடல்கள் இளைத்திருக்கும்.

தீபாராதனை முடிந்ததும் காவடி யெடுப்போர் காவடிகளைத் தோள்களில் தாங்கி, தங்களை மறந்து, இறை உணர்வு மேலிட்டவர்களாகக் கோயிலை நோக்கிச் சென்று முருகனை வழிபடும் காட்சி உள்ளத்தை உருக்குவதாயிருக்கும். காவடிகளின் பின்னே தொண்டர்களிற் பலர் முருகன் திருப்புகழைப் பாடிக் கொண்டே செல்வர், நண்பகல்

வேளை வந்ததும் கோவில் நிருவாகிகள், வெளியூர்களிலிருந்து வந்துள்ள மக்கள் அனைவருக்கும் உணவளிப்பார்கள்.

திருவிழா நாளில் மக்கள் திரளாகக் கூடுவார்கள். அன்று மக்களின் பாதுகாப்பிற்காக ஊர்க்காவலர் பலர் கோவிலைச் சுற்றி நிற்பர். செஞ்சிலுவை இயக்கத் தொண்டர்களும், சாரணர்களும் பொது மக்களுக்குப் பல வகையில் உதவுவர்.

கோவிலுக்கு வெளியே புத்தகங்கள், படங்கள் விற்போரும், பித்தளை, அலுமினிய வெள்ளிப் பாத்திரங்கள் விற்போரும், வளையல்கள், பலூன்கள், பொம்மைகள் முதலியவை விற்போரும், கடலை முதலிய தின்பண்டங்கள் விற்போரும், காட்சியளிப்பர். வழிபாடு முடிந்து வீட்டுக்குத் திரும்புவோர், தத்தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு செல்வர்.

பல திறப்பட்ட மக்கள் ஒருங்கு சேர்ந்து இறைவனை ஒரே மனதுடன் வழிபடுவதற்குத் திருவிழாக்கள் மிக இன்றியமையாதவை. கல்வியறிவில்லாத மக்கள், திருவிழாவின்போது கோவில்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கண்டு, "இறைவன் ஒருவன் உளன்; அவனை வழிபடுதல் வேண்டும்" என உணர்கின்றனர். நீண்ட நாட்களாக இறைவனைத் தொழ மறந்திருந்தவர்கள், திருவிழாவின் போதாவது இறைவனை எண்ணவும் வணங்கவும் இடமுண்டாகும். மக்கள் பலர் ஒருங்கு சேர்ந்து ஒருமை எண்ணத்துடன் இறைவனை வணங்குவதால், பற்பல நன்மைகள் உண்டாதல் கூடும்.

பல வகைப் பட்ட மக்களைக் காண நேருவதால் ஒருவருடைய நடை உடை பாவனைகளை மற்றவர்

135742
TB
031 (6)
1462

அறிய முடிகிறது. கைத் தொழில் வளர்ச்சியும் வாணிகப் பெருக்கமும், பொருளாதார வளர்ச்சியும் திருவிழாக்களின் மூலம் ஏற்படுகின்றன.

பயிற்சிகள் :

1. விடை கூறு :
   1. விழா என்பதன் பொருள் யாது ?
   2. தைப்பூச விழா எப்பொழுது கொண்டாடப்படுகின்றது ?
   3. திருவிழாவன்று கோவிலின் உட்புறம் எவ்வாறு இருக்கும் ?
   4. திருவிழா என்பது எவற்றைக் குறிக்கும் ?
   5. கோவிலுக்கு வெளியே காணக் கூடியவை யாவை ?
   6. தைபூசத்திருவிழாவில் ஏற்படும் பயன்கள் யாவை ?

2. பொருள் கூறு : தொழ, ஒருமை, துப்புரவு, சமயம், முகப்பு, கமுகு, நோன்பு, வாணிகக் பெருக்கம்.

3. பனியில், பணியில், தனித்து, தணித்து, வன்ன, வண்ண, வன்மை, வண்மை, தன்மை, தண்மை— ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத் தெழுது.

4. நிறைவு செய் :
   1. ஆற்றைக் கடக்க உதவுவது...
   2. தொலைவிலுள்ள பொருட்களைக் காண உதவுவது.........
   3. நாட்டின் பழம் பொருட்களைப் பிறர் பார்க்கச் சேகரித்து வைக்குமிடம்.........
   4. இஸ்லாமியர்கள் இறைவனை வணங்குமிடம்.........
   5. புத்த சமயத்தவர் பகவானை வணங்குமிடம்.........

# 11. பொதுப் பூங்கா

பல வண்ண மலர் குலுங்கும் செடி கொடிகளும், நிழலும் கனியும் தரும் மரங்களும் மனித வாழ்வில் முக்கிய இடம் பெறுகின்றன.

மலாயாவின் கிராமப் புறங்கள் இயற்கை வனப்பும் எளிமையும் நிரம்பியவை. ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் கனிதரும் மரங்கள், பூச் செடி கள், காய்கறிச் செடிகள் முதலியன பயிராக்கப்படு கின்றன. ஆகவே, இங்கு எந்நேரமும் குளிர்ந்த நறுங்காற்று வீசிக் கொண்டேயிருக்கின்றது.



படம் 19.

நகர்ப்புற நிலை இதற்கு நேர்மாறானது. வான ளாவிய அரசாங்கக் கட்டடங்கள், தொழிலகங்கள், நெருக்கமான வீடுகள், கடைகள், சந்தைகள், சாரி சாரியாகச் செல்லும் ஊர்திகள் ஆகியன நகர்ப்புற வாழ்விற்குப் பெருமையளிக்கின்றன. ஆனால், நகர்ப்

புறங்களில் மக்கள் பெருக்கம் மிகுதி. இங்கு, ஒரே வீட்டில் காற்ருேட்டங் குறைந்த சிறு சிறு அறைகளில் பற்பல குடும்பத்தினர் சேர்ந்து வாழவேண்டிய இக்கட்டான நிலையிருக்கிறது.



படம் 20.

தொழிற்சாலைகளும், ஊர்திகளும் புகையைக் கக்கிக் காற்றின் தூய்மையைக் கெடுக்கின்றன. பொறுப்பற்ற நகர மாந்தரிற் பலர் குப்பை கூளங்களைக் கண்ட இடங்களிலெறிந்தும், எச்சிலை உமிழ்ந்தும் நகர அழகைக் கெடுக்கின்றனர். இவற்ருல் காற்று நச்சுத் தன்மை யடைந்து, மக்களின் உடல் நலத்தைக் கெடுக்கின்றது. இதனை நன்குணர்ந்த அரசினர் நகரமக்களின் உடல் நலத்தைப்பேணவும், அவர்கள் நல்ல காற்றை நுகர்ந்து இன்புறவும் பொதுப் பூங்காக்கள் தேவை என்பதை உணர்ந்தனர்.

மலாயாவிலுள்ள மன்னர்களின் அரண்மனைகள், அதிகாரிகளின் இல்லங்கள், செல்வர்களின் மாளி

கைகள் ஆகியவற்றை அடுத்து அழகிய பூம் பொழில்கள் அமைக்கப்படுகின்றன. இவை அந்தந்தக் குடும்பத்தினரின் பொழுது போக்கிற்கும், விருந்தினரை உபசரிப்பதற்கும் பயன்படுகின்றன. பொது மக்கள் இப்பூம் பொழில்களைப் பயன்படுத்திக் கொள்ள அநுமதிக்கப்படுவதில்லை. ஆகவே, நகர மக்கள் அனைவருக்கும் பயன்படும் நிலையில், பொதுப் பூங்காக்கள் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தோட்டக்கலை பற்றிய அறிவும் அநுபவமும் நிறைந்த ஆங்கிலேயர் இதில் மிக அக்கறை செலுத்தினர்.

மலாயாவிற்காணப்பெறும் பொதுப்பூங்காக்கள் அனைத்தும் ஆங்கிலேயர் இந்நாட்டை ஆண்ட போது, அவர்களின் மேற்பார்வையின் கீழ் உருவாக்கப்பட்டவை. மலையடிவாரங்களை யடுத்த எழில் மிகுந்த பசும்புல் வெளிகளில் இவை அமைந்துள்ளன. பினங்கு, தைப்பிங், ஈப்போ, கோலாலும்பூர் முதலிய நகர்களில் அமைந்துள்ள பொதுப் பூங்காக்கள் ஆங்கில மக்களின் தோட்டக்கலை அறிவுக்கும், இயற்கைப் பொருள்களின் மீது அவர்கள் கொண்டிருந்த ஆர்வத்திற்கும் எடுத்துக் காட்டுகளாய் இலங்குகின்றன.

பொதுப் பூங்காக்கள் அனைத்தும் நகர சபைகளின் பொறுப்பில் உள்ளன. நகர சபைகளின் நிருவாகிகள் பூங்காக்களின் அழகும் தூய்மையும் கெடாதவாறு கவனித்து வருகின்றனர். இங்குப் பல்வகை மலர்ச் செடி கொடிகள், நிழல் தரும் மரங்கள், படகு செலுத்தி விளையாடுவதற்கேற்றவாறு அமைக்கப்பட்ட செய்குளங்கள், குழந்தைகள் விளையாடிப் பொழுதுபோக்குவதற்கான ஊஞ்சல்

கள், சறுக்குப் பலகைகள் முதலியன உண்டு. மக்கள் இனிதாயமர்ந்து ஒருவரோடொருவர் மகிழ்ந்து உரையாட ஆங்காங்கே நீண்ட நாற்காலிகள் போடப் பட்டிருக்கின்றன. பொது மக்கள் அனைவரும் சாதி, சமய, மொழி வேறுபாடின்றித் தங்கள் ஓய்வு நேரத்தைக் கழித்து மனவமைதியும் மகிழ்வும் பெறப் பொதுப் பூங்காக்கள் உறுதுணையாயமைகின்றன.

பயிற்சிகள் :

1. விடை கூறு : 1. மலாயாவிலுள்ள பொதுப் பூங்காக்கள் யாரால் அமைக்கப் பட்டவை ?
   2. பொதுப் பூங்காக்கள் யாரால் நிர்வகிக்கப்படுகின்றன ?
   3. நகர மக்கள் பொதுப் பூங்காவை எவ்வாறு பயன்படுகின்றனர் ?
   4. பூங்காக்களின் பயன் என்ன ?
2. நேர்மாறுனது, பெருமையளிக்கின்றன, பொறுப்பற்ற, இன்புறவும், எழில் மிகுந்த—ஒவ்வொரு சொற்றொடரையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்தெழுது.
3. தாழ் நிலம், மழுங்கல், பணிவு, தோற்றம், அமிழ்தல்—எதிர்ச்சொற்கள் எழுது.
4. நகரசபை, தொழிற்சாலை, பொருப்பற்ற, நகரமாந்தர், மனித வாழ்வு—பிரித்தெழுது.
5. மலாயாவின் கிராமப் புறங்கள் இயற்கை வனப்பும் எளிமையும் நிரம்பியவை—இவ்வாக்கியத்தை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.
6. காற்று நச்சுத் தன்மை அடைகின்றது. மக்கள் உடல் நலத்தைக் கெடுக்கின்றது. இவ்விரு வாக்கியத்தையும் ஒரே வாக்கியமாக இணைத்து எழுது.

# 12. குகைக் கோவில்கள்

பண்டைய மக்கள் மலைக் குகைகளை வாழுமிடங்களாகவும், வழிபடும் ஆலயங்களாகவும் கொண்டனர். எகிப்து, சீனு, இந்தியாவில் எல்லோரா, அசந்தா ஆகிய இடங்களிலிருக்கின்றன. அவற்றிலுள்ள சிற்பங்களும், ஓவியங்களும் கால வெள்ளத்தால் அழியாதவை; கண்டவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுந் தன்மை வாய்ந்தவை.



படம் 21. பகோடா.

சீன, இந்தியக் குகைக் கோவில்களிற் பல புத்த ஆலயங்களாகவேயிருக்கின்றன. புத்த ஆலயத்தைப் "புத்த விகாரை" எனவுங் கூறுவர்.

சீன மக்களிற் பெரும்பாலோர் புத்த சமயத்தினராவர். ஆகவே, இங்குக் குடியேறிய சீனர்களும்

தங்கள் நாட்டு வழக்கப்படி, குகைகளைக் குடைந்து புத்த விகாரைகளை வைத்துள்ளனர்.

மலாயாக் குகைக் கோவில்களின் முகப்பில் அழகிய செயற்கை முறையிலமைந்த தாமரைக் குளங்களைக் காணலாம். அழகிய சவுக்கு மரங்களும், பல்வகைப் பூச் செடிகளும் சில இடங்களிற் காணப் படுகின்றன.



படம் 22. போதி சத்துவர்.

ஆலயத்தினுள்ளே நுழைந்ததும் எங்கும் சந்தன வத்தி மணங் கமழ்கின்றது. முதலில் குகை உட் புறத்தில், கண்ணாடிப் பேழையினுள் போதி சத்து வரின் வெண்கலச் சிலை வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதைக் கடந்து குகையின் நடுப்பகுதியை அடையும்போது உயர்ந்த கண்ணாடிப் பேழையினுள் தாமரை மலர் மீது பதுமாசன மிட்டுத் தியானத்தில்

அமர்ந்திருக்கும் புத்தரின் தவத் திருவுருவம் உள்ளது. அப்பேழையின் முன்னே ஒரு பீடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலுள்ள வாயகன்ற வெண்கலக்கிண்ணத்திற் சந்தன வத்திகள் புகைந்து



படம் 23. புத்தர்.

கொண்டிருக்கின்றன. பல முகங்களை யுடைய எண்ணெய் விளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்றன.

கிச்சிலி, திராட்சை முதலிய பழ வகைகள் புத்தர் பிரான் திருவுருவத்துக்குப் படைக்கப்பட்டிருக் கின்றன.

புத்தர்பிரான் திருவுருவத்திற்கு இருமருங்கிலும் போதிதருமர் முதலிய புத்தமதத் துறவிகளின் உரு வங்களிருக்கின்றன.

குகையின் மேற் பகுதிகளில் செயற்கைத் தளங்கள் அமைத்துப் படிக்கட்டுகளும் அமைத்திருக் கிறார்கள். ஒவ்வொரு மேற்றளத்திலும் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ஜாதகக் கதை விளக்கப் படங்களிருக்கின்றன.

குகையின் வெளிப் புறத்தைச் சார்ந்துள்ள புல் வெளியும், சிறு காடடர்ந்த மலைச் சிகரங்களும் கண்ணுக் கினிய காட்சிகளாய் அமைந்திருக்கின்றன. அங்கு ஆழமில்லாத, படிக்கட்டுள்ள ஒரு வட்டக் கிணறு தோண்டி, அதில் நூற்றுக்கணக்கான ஆமைகளை வளர்க்கின்றார்கள்.

சீன மக்கள் யாவரும் ஊன் உண்பவர்கள். ஆனால், புத்த ஆலயங்களிலுள்ள சீனக் குருமார் அறவே ஊன் உணவு கொள்வதில்லை; மரக் கறி வகைகளையே சோற்றுடன் கலந்து உண்பர்.

சீனக் குருமார் அனைவரும் துறவிகள் ஆவர். இவர்களுள் ஆடவர்களும் உளர்; பெண்டிரும் உளர். துறவிகளில் ஆடவரைப் பிக்குகள் என்பர். பெண் டிரைப் பிக்குணிகள் என்பர். துறவிகளில் ஆட வராயினும் பெண்டிராயினும் தலையை மழுங்கச் சிரைத்து மஞ்சள் ஆடை தரித்திருப்பர்; கழுத்தில் மணி மாலைகள் அணிந்திருப்பர்.

குகைக் கோவில்களுக்கு வெளியே குருமார் வசிப்பதற்கேற்ற கட்டடங்களும், பணியாட்களுக் குரிய வீடுகளுமிருக்கின்றன.

குகைக் கோவில்களைச் சீன மக்கள் அழகாக வைத்திருக்கின்றனர். உள்ளூரிலிருந்தும் வெளியூரி லிருந்தும் பலர் குகைக் கோவில்களைக் காண வரு கின்றனர்; அங்கு நிலவும் இயற்கைக் காட்சிகளைப் படம் பிடித்துச் செல்லுகின்றனர்.

கோபுரத்தோடு கூடிய புத்த ஆலயத்தைச் சிலர் "பகோடா" எனவுங் கூறுவர்.

பயிற்சிகள் :

1. விடை கூறு:
   1. பண்டைய மக்களுக்குக் குகைகள் எவ்வாறு பயன்பட்டன?
   2. ஜாதகக் கதைகள் என்பன யாவை?
   3. குகைக் கோவில்களின் முகப்பிலே காணக் கூடியன யாவை?
   4. புத்த விகாரை என்பது எதைக் குறிக்கிறது?
   5. புத்த மதத் துறவிக்கு வேறு பெயர் என்ன?
   6. நீ பார்த்த ஒரு புத்த விகாரையைப் பற்றிக் கூறு.

2. அகராதியைப் பார்த்துப் பொருள் கூறு:

   அடிப்படை, மடங்கள், அறிவியல், தத்துவம், மௌனம், வாக்குரிமை, பொறுப்பு, சிற்பங்கள், மருங்கு, ஊன், பதுமாசனம்.

3. எதிரிடைச் சொற்கள் கூறு:

செயற்கை, பலவகை, அகன்ற, உருவம், குருமார், துறவி, பிக்கு, உள்ளூர், ஆடவர், மந்தம்.

4. வாக்கியத்தில் அமைத்தெழுது:

பழம்பெரும், கொள்ளைகொள்ளும், உட்புறத்தில், பழவகைகள், சார்ந்துள்ள, கண்ணுக்கினிய, குருமார்.

5. துறவிகளில் ஆடவரைப் பிக்குகள் என்பர்—ஆடவர் என அமையும்படி வாக்கியத்தைப் பொருள் கெடாமல் மாற்றி எழுது.

6. குகைக் கோவில்களைச் சீன மக்கள் அழகாக வைத்திருக்கின்றனர்—சீன மக்களால் என அமையும்படி வாக்கியத்தின் பொருள் மாறுபடாமல் மாற்று.

7. புத்த ஆலயத்தை பகோடா எனவும் கூறுவர்—ஆலயத்துக்கு என அமையும்படி, வாக்கியத்தின் பொருள் கெடாமல் மாற்றி எழுது.

# 13. நன்னீர்த் தேக்கம்

உயிருனங்களின் உயிர் வாழ்க்கைக்கு நீர் மிக இன்றியமையாதது. நீரை மழையின் மூலம் பெறுகிறோம். வானத்திலிருந்து பொழியும் மழை நீர் நிலத்தை அடையும் வரை தூயதாகவே யிருக்கிறது.

தூய மழை நீருக்கு மணம், நிறம், சுவை, நோயை உண்டாக்கும் பண்பு ஆகியன கிடையா. ஆனல், அது விழுந்த இடத்திற்கேற்ற இயல்புகளைப் பெற்றுத் தன் நிலை கெடுகின்றது.

நிலத்திற் பெருக்கெடுக்கும் மழை நீர், அது பாய்ந்து செல்லும் நிலங்களுக்கு ஏற்பச் சிவப்

பாகவோ, கருமையாகவோ, கலங்கலாகவோ, தெளி வாகவோ நிறம் மாறிக் குப்பைக் கூளங்களையும், கற்களையும், மண்ணையும் வாரிக் கொண்டு ஓடை, ஆறு, ஏரி, தடாகம் முதலிய நீர் நிலைகளை அடை கின்றது. அவ்வாறு பாயும் நீரில் மண்ணோடு கலந் துள்ள நுண்ணிய நச்சுக் கிருமிகளும் கலந்து விடு கின்றன. ஆகவே, எந்த நீர் நிலையிலுள்ள நீரையும் தூய்மை செய்யாமல் பருகுதல், நோயை வலிய அழைப்பதாகவே முடியும்.



படம் 24. நன்னீர்த் தேக்க அமைப்புப் படம்.

நச்சுக் காய்ச்சல், வாந்திபேதி போன்ற கொடு நோய்கள், தூய்மை செய்யப்படாத நீரைப் பருகுதலா லேயே தோன்றுகின்றன என்பதை மருத்துவ நிபுணர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். ஆகவே, குடிகளின் நல்வாழ்வில் அக்கறை கொண்டுள்ள

அரசினர், மராமத்திலாகா மூலமாக மக்களுக்கு நன்னீர் கிடைக்குமாறு செய்கின்றனர். நன்னீர்த் தேக்கம் அமைத்து மக்களுக்கு நல்ல நீர் வழங்கும் பணி, மராமத்திலாகாவின் ஒரு பகுதியாகச் செயற்படுகின்றது.

மலாயாவிலுள்ள நன்னீர்த் தேக்கங்கள் பெரும்பாலும் குன்றுகளை அடுத்தே அமைக்கப்படுகின்றன. சில, சமவெளிகளைச் சார்ந்துள்ள மேட்டு நிலங்களிலும் நிறுவப்படுகின்றன.

முதலாவதாகக் குன்றின் அருகிலோ மலையின் அருகிலோ ஓடிக் கொண்டிருக்கும் ஆற்று நீரைக் குறுக்கே ஓர் அணை கட்டித் தேக்குகிறார்கள். தேக்கிய நீர் வலை போன்ற தடுப்புக் கம்பிகளின் வழியாக ஓர் அகன்ற பள்ளத்தை அடைகின்றது. நீரோடு கலந்து வரும் கற்கள், செத்தைகள் முதலியன கம்பிகளுக்கு வெளியே தங்கி விடுகின்றன. நீரிலுள்ள அழுக்குகள், பள்ளத்தின அடிவட்டத்தை அடைகின்றன.

இரண்டாவதாகப் பள்ளத்திலுள்ள நீரைப் பல தடுப்புகள் உள்ள ஒரு தொட்டியிற் புகவிட்டு, அதில் குறித்த அளவோடு படிக்கார நீர் கலக்குமாறு செய்கின்றனர். தொட்டியிலுள்ள ஒவ்வொரு தடுப்பும் நீரின் வேகத்தைக் குறைக்கின்றது. படிக்கார நீர், ஒவ்வொரு தடுப்பிலும் நீரிலுள்ள வண்டலையும் அழுக்கையும் படியச் செய்கின்றது.

மூன்றாவதாகத் தொட்டியிலுள்ள நீர் பொடி மணல், பெருமணல், கற்கள் முதலியன நிரப்பப்பட்டுள்ள வடிகட்டுமிடத்தை அடைகிறது. இங்கு நீரிற் கலந்திருக்குக்கும் நுண் கிருமிகளிற் பல பொடி

மணலிலும் பெருமணலிலும் ஒட்டிக் கொள்ளு கின்றன.

நான்காவதாக வடிகட்டுமிடத்திலிருந்து வெளி யாகும் நீரில் "குளோரைன்" என்னும் மருந்தைக் கலக்கிருர்கள். இம் மருந்து, வடிகட்டுமிடத்திலிருந்து தப்பிய கிருமிகளை அழித்து, நீரைத் துப்பரவு செய் கின்றது.

துப்புரவு செய்யப்பட்ட நீரை ஓரிடத்திற்குக் கொண்டு வந்து, அங்கிருந்து பற்பல பிரிவுகளாகச் செல்லும் சிறிய பெரிய குழாய்கள் மூலம் இல்லங் களுக்கும், கடைகளுக்கும், தொழிலகங்களுக்கும் வழங்குகிருர்கள்.

மக்களின் அன்ருடத் தேவைக்கு ஒதுக்கியது போக, மீதியுள்ள நீரைத் தற்காப்புக்காக ஓரிடத்திற் சேமித்து வைப்பார்கள். இவ்வாறு நீரைச்சேமித்து வைக்குமிடமே, "நன்னீர்த்தேக்கம்" என அழைக் கப்படுகிறது. இந்த நீர்த் தேக்கம், கதிரவன் ஒளி தடங்கலின்றிப் பாயும் வெட்ட வெளியில் அமைக்கப் பெறும்.

பயிற்சிகள் :

1. விடை கூறு.
   1. நீர்த் தேக்கம் என்பது யாது?
   2. படிக்காரத்தின் பயன் என்ன ?
   3. நீரில் " குளோரைன் " கலப்பதால் என்ன நேருகின்றது ?
   4. நல்ல நீருக்குரிய அடையாளங்கள் யாவை ?
   5. குடிநீர் வழங்கும் பொறுப்பை எந்த இலாகா மேற்கொண்டிருக்கிறது ?

2. ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.
   நிரை, நிறை, சிரை, சிறை, பெரும், பெறும், மாரி, மாறி, சீரிய, சீறிய.
3. நீர்த் தேக்கம் கதிரவன் ஒளி பாயும் வெட்டவெளியில் அமைக்கப் பெறும். எழுவாய் - பயனிலை - செயப்படு பொருள் கூறு.
4. பசுமை+புல், மேல்+தளம், நல்+நீர், மருத்துவம்+நிபுணர், சமம்+வெளி.
5. நிறைவு செய்:
   1. மராமத்திலாகா............வழங்குகின்றது.
   2. படிகார நீர்.........யும்...... .....யும் படியச் செய்கின்றது?
6. உயிரினம், நச்சுக்காய்ச்சல், நன்னீர், அடிமட்டத்தை, ஒவ்வொரு, வடிகட்டுமிடம்—பிரித்து எழுது.
7. அநுபவம், வேதம், நெறி, அக்கரை, மராமத்து, நன்னீர், துப்புரவு, சேமித்து, தடங்கல்—பொருள் எழுது.

## 14. பேரா நதி தன் வரலாறு கூறுதல்

நான் ஒரு நதி. என்னை ஆறு எனவுங் கூறுவர். நான் என்னைச் சூழ்ந்துள்ள நிலத்தை அறுத்துக் கொண்டே செல்லுவதால் என்னை ஆறு என்னுங் காரணப் பெயரால் அழைக்கின்றனர். நான் பேரா மாகாணத்தின் செழிப்பிற்குக் காரணமாக விளங்குவதால் என்னைப் பேரா நதி என்னும் சிறப்புப் பெயரிட்டு அழைக்கின்றனர்.



படம் 25. ஆற்றங்கரை.

நான் எங்கே பிறந்தேன்? எவ்வாறு வளர்ந்தேன்? என்னுடைய போக்கு எத்தகையது? நான் எவ்வாறு பேரா மாகாண மக்களுக்கு உதவுகிறேன்? என்பன பற்றி உங்களுக்குக் கூறுகிறேன்.

நான் உங்களைப் போல வீட்டில் பிறக்கவில்லை. தாய் மடியிலமர்ந்து தாலாட்டுப் பெற்று வளரவில்லை. ஆனல், எனக்கும் தாய் உண்டு. பேரா மாகாணத்தில் மேல் பேரா மாவட்டத்தில் உள்ள வடக்கு மலைத் தொடரே என் தாய். அதனைக் "குனேங்மகார்" என நீங்கள் கூறுவீர்கள். நான் இம்மலைத் தொடரில் பிறந்ததும் பெற்ற தாயைப்

பிரிந்து, "பீலம்" வழியாக மேட்டு நிலத்தில் ஓடிக் "கிரீக்" என்னுமிடத்தில் பள்ளத்தாக்கை அடைந்தேன் : அங்குள்ள நிலப் பரப்பைக் கண்டேன்.

மனிதர் பிறந்தவுடன் "குழந்தை" என அழைப்பது போல, நான் மலையிலிருந்து கிரீக் பள்ளத்தாக்கை அடையும் வரை "அருவி" என அழைக்கப்பட்டேன். பிறகு கிரீக்குக்கு வடக்கில் மேற் கரையில் "ரூய்" ஆறும், கீழ்க் கரையில் "தெமாங்கூர்" ஆறும் என்னுடன் கலந்து கொண்டதால், நதி என்னும் பெயரோடு அகன்ற உருவில் ஓடிக் கொண்டிருக்கும்போது, "கிளடாங்" தொடருக்கும் "பிந்தாங்" தொடருக்கும் இடையிலுள்ள "சென்ட்ரோ" அணையை அடைந்தேன்.

"சென்ட்ரோ" அணையிலுள்ள மின்சாரம் சேகரிக்கும் இயந்திர உருளைகளில் யான் விசையாகப் பாய்ந்து அவற்றைச் சுழற்றுகிறேன். ஆதலால், என்னிடமிருந்து ஏராளமான மின்சாரத்தைப் பெற்றுக் "கிந்தா"ப் பள்ளத்தாக்கில் உள்ள ஈயச் சுரங்கங்களுக்கும், ஈப்போ, பத்து காஜா, கம்பார், கோலக் கங்சார் போன்ற பெரிய நகர்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கும் வீடுகளுக்கும் வழங்குகின்றனர்.

"சென்ட்ரோ" அணையின் வடக்கே கீழ்க் கரையில் "பீயா" ஆறும், தெற்கே "புலுஸ்" ஆறும் என்னுடன் கலந்து கொள்கின்றன. அணையைக் கடந்து கோலக் கங்சார்ப் பட்டினத்துக்கருகில் நான் வரும்போது, கங்சார் நதியும் என்னுடன் சேர்ந்து கொள்கிறது.

மலாய் மொழியில் "கோலா" என்றால் முகத் துவாரம் என்று பொருள். கங்சார் ஆற்றின் முகத் துவாரம் என்னேடு சேர்வதால், என்னருகேயுள்ள ஊரைக் கோலக் கங்சார் என அழைக்கலாயினர். இப் பட்டினத்தைப் போலவே எங்கோர், மானேங், பாரிட் போன்ற கிராமங்களும் என் கரையருகே உள்ளன. மக்கள் என்னைக் கடந்து செல்ல எங்கோருக்கு அருகில் ஒரு பெரிய புகை வண்டிப் பாலமும், ஒரு கற் பாதைப் பாலமும், பாரிட்டுக்கு அருகில் ஒரு கற்பாதைப் பாலமும் அமைத்துள்ளனர்.

நான் கோலக் கங்சார்ப் பட்டினத்தைக் கடந்ததும் சமவெளிகளின் ஊடாகத் தெற்கு நோக்கி ஓடி, மேற்கு நோக்கித் திரும்புகிறேன். கீழ்ப் பேரா மாவட்டத்தில் கிந்தா ஆறும், பட்டாங் பாடாங் ஆறும் என்னுடன் கலக்கின்றன. கீழ்ப் பேரா மாவட்டத்தில் என் கரையருகேயுள்ள மிகப் பெரிய பட்டினம் தெலுக்கான்சன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

என் இரு கரையோரங்களிலும் உள்ள கிராமங்களில் வாழும் மலாய்க்காரர்கள் என்பாலுள்ள நீரைக் கொண்டு நெற்பயிர் செய்கின்றனர். "சுங்கை மானிக்" என்னுமிடத்தில் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலப் பரப்பில் நெல் பயிரிடப்படுகின்றது.

என் கரையருகே சில இடங்களில் அத்தாப்பு மரங்கள் செழித்து வளர்கின்றன. மலாய்க்காரர்கள் பலர் அதன் ஓலைகளை மட்டையோடு வெட்டிப் பிளந்து, முடைந்து, கூரை வேய்வதற்கு விற்பனை செய்கின்றனர். என்னிடம் வளரும் மீன்கள்

பலருக்கு உணவாகின்றன. வலைஞர் அவற்றை வலை வீசிப் பிடித்து விற்பனை செய்கின்றனர்.

என்னருகே வாழும் சிறுவர்களும், பெரியோரும் மகிழ்ந்து குடிக்கவும், குளிக்கவும் நீர் தருகின்றேன். எனினும், சில இடங்களில் வாழ்வோர் என்னிடம் வந்து பல அசுத்தங்களைச் செய்கின்றனர். அவர் களின் அறியாமையைக் கண்டு நான் வருந்துவ துண்டு. நன்மை செய்வோருக்குத் தீமை செய்வா ரும் உலகில் உண்டல்லவா ?

நான் மலாக்கா நீரிணையோடு கலக்கும் முகத் துவாரத்திலிருந்து தெலுக்கான்சன் வரை, பினங்கி லிருந்து சிறு கப்பல்கள், படகுகள் எப்போதும் வந்து செல்கின்றன. தவிர இயந்திரப் படகுகளும், சிறிய படகுகளும் என் மீது செல்ல ஏற்ற சாதனங் களாக உள்ளன.

நான் பிறந்த இடமாகிய "குனேங் மகாரை" ஒரு நாளும் திரும்பிப் பார்க்க மாட்டேன். மழை அதிகமாகப் பெய்து இரு கரையும் புரள நான் ஓடும்போது மலையிலுள்ள கற்களை உருட்டி விளையாடு வேன்; மரங்களை வேருடன் பிடுங்கி அடித்துச் செல்லுவேன்; மேட்டைப் பள்ளமாகவும், பள்ளத்தை மேடாகவும் மாற்றுவேன்.

எங்கள் இனத்தார் எல்லாரும் எங்களைத் தோற்றுவிக்கும் கடலை அடைவது போல, நான் "பகான் டத்தோ"வை அடைந்ததும் என் தலைவ னை மலாக்கா நீரிணையில் இரண்டறக் கலந்து விடு வேன். 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது, என் பெருமையைப் புலப்படுத்தும் பழமொழியாகும்.

பயிற்சிகள் :

1. விடை கூறு: 1. பேரா நதி எங்கு உற்பத்தியாகிறது ?
2. சென்ட்ரோ அணை எங்கு அமைந்துள்ளது ?
3. கோலா என்பதன் பொருள் என்ன ?
4. பேரா நதிக் கரையோரத்தில் நடைபெறும் தொழில்கள் என்ன ?
5. பேரா நதியின் முகத்துவாரம் எது ?
6. முகத்துவாரம்—வேறு இரு பொருள் எழுது.

2. மலாய்க் காரர்கள் அத்தாப்பு ஓலைகளை மட்டையோடு வெட்டிப் பிளக்கிருர்கள் ; முடைகிருர்கள் ; விற்கிருர்கள்—ஒரே தொடராக்கு.

3. பேரா நதியின் ஆற்றங்கரையில் அத்தாப்பு மரங்கள் செழித்து வளருகின்றன—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கூறு.

4. செழித்து, அகன்ற, இடையில், உலகில், ஏராளமான – ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

5. ரப்பர், தன் வரலாற்றைத் தானே கூறுவது போல வருணித்துச் சில வாக்கியங்கள் எழுது.

# 15. கீஸா பிரமிடுகள்

பிரமிடுகள் என்பன சதுர வடிவில் ஆரம்பமாகி ஒவ்வொரு பக்கமும் முக்கோணமாகக் குவிந்து உச்சியில் ஒன்று சேருவதையே குறிக்கும். இவை ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் எகிப்தையாண்ட மன்னர்களான பாரோக்களின் உடல்களை அடக்கஞ் செய்வதற்காக அவர்களால் அமைக்கப்பட்டவை. இவை சவ அடக்கத்திற்காகவே கட்டப்பட்டதால் இவற்றைச் "சமாதிக் கோபுரங் கள், கல்லறைக் கட்டடங்கள், கூர்நுதிக் கோபுரங் கள்" எனவும் அழைப்பர்.

எகிப்திய நாகரிகம் மிகப் பழமையானது. அது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புகழ் சிறந்து விளங்கிற்று, என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின் றனர். நைல் ஆற்றங் கரையின் இருபுறமும் அமைந்து கிடைக்கும் செழுமையான நிலப் பரப்பே எகிப்து என அழைக்கப்படுகின்றது.

இன்றைய எகிப்திய மக்களிற் பெரும்பாலோர் அராபியப் பண்பாட்டைத் தழுவிய இஸ்லாமியர்கள் ஆவர். இவர்கள் உருவ வழிபாடு செல்வதில்லை. ஆனால், பண்டைய எகிப்தியர் பல அழகிய கற் கோயில்களை எழுப்பினர். அக் கோயில்களுள் ஒசைரிஸ், பிட்டா, ஆமன், ஜோத் முதலான தெய்வ உருக்களை வைத்துத் தொழுதனர்; அவற்றிற்கு உயிர்ப்பலி ஈந்தனர்; இசைக் கருவிகளோடு பண் இசைத்துப் பற்பல விழாக்களைக் கொண்டாடினர்.

பழைய எகிப்திய மக்கள் தங்கள் மன்னனைக் கதிரவனின் வழித் தோன்றல் எனக் கொண்டனர். நாள்தோறும் மாலையிற் சூரியன் இறந்து, மறுநாட்



படம் 26. பிரமிடு.

காலையில் உயிர்பெற்று எழுவதாக அவர்கள் நம்பினர். இந்த நம்பிக்கையின் விளைவாக ஒருவன் இறந்த பின்பும் வாழலாம் என அவர்கள் எண்ணினர். மரணத்துக்குப்பின் கீழ் உலகில் உள்ள தெய்வங்களோடு வாழ்ந்த மன்னர்களின் கதைகளும் பழைய எகிப்திய மதத்தில் இடம் பெற்றன.

உடல் அழிந்து போனால், உயிர் தனித்து வாழாது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். ஆகவே, உயிர் தங்கிவாழ உடல் நன்கு பாதுகாக்

கப்பட வேண்டுமென எண்ணி, இறந்தவர்களின் உடல்களில் மருந்தூட்டிப் பதனிட்டு அவற்றை அழியாது காத்தனர்.

பதனிடப்பட்ட உடலைப் பாயினுள் வைத்துப் புதை குழியினுள் கிடத்தினர். அத்துடன் அவ்வுடலுக்குரியவர் பயன்படுத்திய பொருள்கள், அணிகலன்கள், வேட்டைக் கருவிகள், உணவுப் பண்டங்கள், தண்ணீர் ஆகியனவும் இறந்தவர்களின் கீழுலக வாழ்வுக்காகப் புதைகுழியினுள் வைக்கப்பட்டன.

காற்றடித்ததாலும் மழை பெய்ததாலும் புதைகுழிகளை மூடியிருந்த மண் கரைந்தது. ஆகவே, புதைகுழியுள் வைக்கப்பட்ட சவம், மழையும் வெயிலும் பட்டுச் சிரழிந்தது. இவ்வாறு பிணங்கள் அழிவதைத் தடுக்கப் புதை குழிகளுக்குமேற் காயவைத்த மண், கற்களைக் கொண்ட கட்டடங்கள் அமைக்கப்பட்டன. இக்கட்டடம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வீடுபோன்ற அமைப்புடையது. இவை "மஸ்தாபா" என்னும் பெயர் பெற்றன.

சக்காரா என்னும் இடத்திற் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் அகழ்ந்தெடுக்கப்பட்ட மஸ்தாபாக் கல்லறையொன்றில் அரசன் சிலையும், அவனுடைய குடும்பத்தினர் சிலைகளும் வைக்கப்பட்டிருந்தன. அரசன் வேட்டையாடுதல், விருந்தளித்தல், ஆட்சிமுறைகளைக் கவனித்தல் முதலிய காட்சிகளை விளக்கும் வண்ணப்படங்களும் சுவர்களில் தீற்றப்பட்டிருந்தன.

"மஸ்தாபா" கட்டட முறைக்குப்பின் சோசர் என்னும் மன்னன் சக்காரா என்னும் இடத்திலேயே படிக்கட்டுப் பிரமிடு என்னும் புதுக் கட்டடமொன்

றைத் தனக்காக எழுப்பினன். பிரமிடுகளுள் இதுவே பழமையானது. இது 204 அடி உயரமுடையது. இக்கட்டடத்தின் நடுவில், நில மட்டத்திலிருந்து 92 அடிகளுக்குக் கீழேயுள்ள ஓர் அறையில் சோசர் மன்னனின் சவப்பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது.

சோசருக்குப் பின்னல் எகிப்தை ஆண்ட செனிபெரு என்பாரின் மைந்தனை சியாப்ஸ் மன்னன், உலகப் புகழ்பெற்ற பெரிய பிரமிடு ஒன்றைக் கட்டினன். இது உலக அதிசயங்களுள் ஒன்ருக விளங்குகின்றது. நைல் ஆற்றங் கரையில் "கீஸா" என்னும் இடத்திற் கருகிலுள்ள மேட்டு நிலத்தில் இப்பிரமிடு அமைந்துள்ளது. இன்றைக்கும் இதுவே உலகில் மிகப் பெரிய கட்டடமாக விளங்கு கின்றது.

சியாப்ஸ் பிரமிடுவைக் கட்டி முடிக்க ஓரிலட் சத்து இருபதாயிரம் தொழிலாளிகள் இருபதாண்டுக் காலம் வேலை செய்தனர். இதன் அடித்தளத்தின் பரப்பு பதின்மூன்றரை ஏக்கர்களாகும். இதன் பக் கங்கள் ஒவ்வொன்றும் 756 அடி நீளமுடையது; உயரம் 481 அடி. ஒவ்வொன்றும் இரண்டரை டன் முதல் 15 டன் வரை கனமுள்ள இருபத்து மூன்று இலட்சம் கற்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக் கின்றன. உச்சியில் 36 அடி சதுரமுள்ள தட்டை யான தளமுண்டு. அறையின் உட்புறச் சுவர்களும், அறைகளும், மண்டபங்களும் மெருகிடப்பட்ட வெள் ளைக் கற்களால் ஆனவை. இப்பிரமிடுக்குள் நுழையும் வழி, வடக்குப் பக்கத்தில் நில மட்டத்திலிருந்து 48 அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

சியாப்ஸ் பிரமிட்டுக்குத் தெற்கில் சீபரென் மன்னன் எழுப்பிய பிரமிடு உள்ளது. இதுவும் மிகப்



படம் 27. ஸ்பிங்ஸ்.

பெரிய அமைப்புடையது; 417 அடி உயரமுடையது. இவ்விரண்டு பிரமிடுகளுக்கு முன்னுல் ஒரே கருங் கல்லில் அமைக்கப்பட்ட 240 அடி நீளமும் 66 அடி உயரமும் உடைய "ஸ்பிங்ஸ்" உருவம் செதுக்கப் பட்டிருக்கிறது. இது இரண்டாவது பெரிய பிர மிட்டை எழுப்பிய சீபரென் மன்னனுல் அமைக்கப் பட்டது.

ஸ்பிங்ஸ் என்பது மனித உருவமும் சிங்க உடலும் கொண்ட ஓர் உருவமாகும். எகிப்தியப்

புராணங்களில் மறு உலக வாயிற் காவலாளியாகச் சிங்கம் புனைந்துரைக்கப் பட்டிருக்கிறது.

சீபரென் பிரமிடுவுக்கு அருகில் அவனுக்குப் பின் அரசாண்ட "மைசெரினஸ்" என்ற மன்னனின் பிரமிடு இருக்கிறது. இம்மூன்று பெரிய பிரமிடுகளும் எகிப்தின் தலைநகரான கெய்ரோவுக்கு மேற்கே ஐந்து கல் தொலைவிலுள்ள "கீஸா" என்னுமிடத்திலிருப்பதால் இவற்றைச் கீஸா பிரமிடுகள் என்பர். இப்பிரமிடுகளின் அருகே சிறியனவும் பெரியனவுமான சுமார் எழுபத்திரண்டு பிரமிடுகள் இருக்கின்றன. அவற்றுள் அரச குடும்பத்தினரின் சவப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

அரசர்களின் மறு உலக வாழ்விற்கெனப் பிரமிடுகளுக்குள் ஏராளமான பொன்னும் மணியும், தங்கத்தாலான பொருள்களும் வைக்கப்பட்டிருந்தன. ஆனல், அவற்றை நாடோடிக் கள்வர்கள் பலர் கொள்ளையிட்டுச் சென்றனர். அரபு நாட்டு மன்னர்களுள் ஒருவனை "மாமும்" என்பவனும் பெரிய பிரமிடுக்குள் தானகவே ஒரு வழியை உண்டாக்கிக் கொண்டு நுழைந்து, அங்கிருந்த செல்வக் குவியல்களை வாரிச் சென்றான். இவனுடைய நுழைவுக்குப் பின் பெரிய பிரமிடு அதிகமாகச் சீரழிந்தது. எனினும் அதன் உருவம் மாறவில்லை.

கொள்ளைக்காரர்களின் கண்களுக்குத் தப்பிய சில இடங்கள் பழுதுபடாமல் இருந்தன. சியாப்ஸ் மன்னனின் பெரிய பிரமிடுவுக்கு அருகில், அவன் தாயாருடைய புதைகுழிக் கட்டடமொன்று மண் மூடிக் கிடந்தது. ஆராய்ச்சியாளர்கள் அதனை அகழ்ந்து உள்ளே புகுந்து பார்த்தபோது, அதில்

தங்கத்தாலான பாத்திரங்கள், கத்திகள், நாற்காலிகள், கட்டில்கள் ஆகியவற்றையும், அணிகலன்கள் அடங்கிய நகைப்பெட்டி ஒன்றையும், பளிங்குக் கிண்ணங்கள், செப்புக் கோப்பைகள் முதலியவற்றையும் கண்டனர்.

"கீஸா பிரமிடுகளை அமைத்த சியாப்ஸ், சீபரென், மைசெரினஸ் ஆகியோர் கொடுங்கோலர்களாக விளங்கினர்; யூத மக்களை அடிமைகளாக்கிப் பிரமிடுகளில் வேலை செய்யுமாறு வதைத்தனர்; அரசாங்கச் செல்வமனைத்தும் கல்லறைக் கட்டங்களுக்கே செலவிடப்பட்டன; பிரமிடுகளை அமைப்பதற்காக மன்னர்கள் ஆட்சிமுறை தவறினர்," எனக் கிரேக்க வரலாற்ருசிரியர்கள் கூறுகின்றனர்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்த பிரமிடுகள் காலத்தின் தாக்குதலைத் தாங்கிக் கொண்டு பாலைவனத்தில் தன்னந்தனியாக நிற்கின்றன. வாழ்வின் நிலைமையை அறிவுறுத்துவதுபோல், அப்பிரமிடுகளின் முன்னே "ஸ்பிங்ஸ்" சிலை காட்சியளிக்கிறது.

வட இந்தியாவிலுள்ள தாஜ்மகாலும் சமாதிக் கட்டடமேயாகும். இது ஷாஜஹான் மன்னரால் அவருடைய மனைவி மும்தாஜுக்காக எழுப்பப்பட்டது. இஃதும் உலக அதிசயங்களுள் ஒன்ருகக் காட்சியளிக்கிறது.

**பயிற்சிகள் :**

1. பதில் கூறு.
   1. ஸ்பிங்ஸ் என்பது யாது?
   2. பிரமிடுகள் என்பன யாவை? கீஸா பிரமிடுகள் எங்கேயிருக்கின்றன?

3. படிகட்டுப் பிரமிடு யாரால் கட்டப் பட்டது?
4. சியாப்ஸ் மன்னன் தாயின் கல்ல றையில் காணப்பட்ட பொருள்கள் யாவை?
5. சியாப்ஸ் பிரமிட்டைக் குறித்துப் பன்னிரண்டு வாக்கியங்களுக்குள் எழுது.
6. தாஜ்மகால் யாருக்காக, யாரால் கட்டப்பட்டது?

2. முக்கோணம், மூவாயிரம், கல்லறை, மருந்தூட்டி, வண்ணப்படம், கருங்கல், சவப்பெட்டி, செல்வக் குவியல்—பிரித்தெழுது.

3. வழித்தோன்றல், இஸ்லாமியர், பதனிட்டு, புனைந்துரை —பொருள் கூறு.

4. சமாதி—இப்பொருளைக் குறிக்கும் வேறு மூன்று பெயர்ச் சொற்களை எழுது.

5. நகை—இதனைக் குறிக்கும் இரு பெயர்ச் சொற்களை எழுது.

6. மரம், கிளி, புலி, அப்துல்லா என்பன பொருள்களைக் குறிக்கும் பெயர்களாகும். ஆகவே, இவை பொருட் பெயர் எனப்படும். இப்பாடத்திலிருந்து பத்துப் பொருட் பெயர்களை எடுத்து எழுது.

# 16. அன்னாசி

மலாயாவின் ஏற்றுமதிப் பொருள்களில் அன்னாசியும் முக்கிய இடம் பெறுகின்றது. இது ஜோகூர் மாகாணத்தில் மிகுதியாகவும், சிலாங்கூர், பேரா மாகாணங்களில் குறைவாகவும் பயிராகின்றது.



படம் 28. அன்னாசி.

அன்னாசியின் தாயகம் தென்னமெரிக்காவில் உள்ள "பிரேஸில்" என்பர். எனினும், இன்று அன்னாசிப் பயிர்த் தொழிலில் முன்னணியில் நிற்பவை உரூவாய்த் தீவுகளே.

தகர டப்பிகளில் அடைக்கப்பட்டு உலகச் சந்தையில் விற்பனையாகும் அன்னாசிப் பழங்களுள்,



படம் 29. அன்னசி டப்பாக்களில் அடைத்தல்.

நூற்றுக்கு எழுபது விகிதம் உருவாய்த் தீவுகளிலிருந்தே வருகின்றன.

அன்னசி, ஆண்டு முழுவதும் காய்க்கக் கூடிய வெப்ப மண்டலப் பயிராகும். இதற்கு அதிக நீரும், வெப்பமுந் தேவை. ஆனல், செடியினடியில் நீர் தேங்கி இருத்தலாகாது.

அன்னசித் தண்டின் அடியிலிருந்து அன்னசிக்குருத்துக்கள் தோன்றி வளருகின்றன. இக்குருத்துக்களைப் பெயர்த்து ஊன்றியும், பழத்தின் உச்சியிலிருக்கும் முடியை வெட்டி நட்டும் அன்னசியைப் பயிராக்குவர்.

அன்னசிச் செடி, சுமார் இரண்டடி உயரம் வரை வளரும். அடித்தண்டைச் சுற்றிலும் தாழை மடல் போன்ற இலைகள் அடர்ந்து காணப்படுகின்றன. இலைகள் உட் குழியுள்ளவை; சாறும், நீரும் நிறைந்தவை; இலையின் நடுவே விழும் நீர் நேரே செடியின் அடிப்புறத்தை அடைந்துவிடும். இலையின் விளிம்புகளில் சிறு சிறு முட்களும், நுனியில் நீண்ட முள்ளும் உண்டு.

அன்னசி ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளிற் பலன் தரும். தண்டின் நடுவிலிருந்து பல பூக்கள் ஒருங்கு திரண்டு ஒரே கொத்தாக வெளிவருகின்றன. பின்னர் இவையே காயாகவும், கனியாகவும் மாறு கின்றன. காய் பசுமையாயும், பழம் மஞ்சளாயும் காணப்படும்.

பழத்தின் மேற்புறம் அழுத்தமாயிருக்கும்; செதிள் போன்று சொரசொரப்பாயிருக்கும்; உட் புறத்தில் வெளிறிய மஞ்சள் நிறத்தில், அல்லது ஆரஞ்சுப் பழ நிறத்தில் சாறு நிரம்பிய சதைப் பற்றுக் காணப்படும். அதுவே உண்ணத் தகுந்த பகுதியாகும்.

அன்னசிப் பழம் சுவையும், மணமும் நிரம்பி யது. அதைத் தனியாகவும் பச்சடி செய்தும் உண் ணலாம். பழம் சத்து மிகுந்தது; அசீரணத்தைப் போக்கக் கூடியது.

ஜோகூருலும், சிங்கப்பூரிலும் அன்னசிப் பழங் களைத் துண்டுகளாக நறுக்கி டப்பாக்களில் அடைத்து வெளி நாடுகளுக்கு அனுப்பும் தொழில்கள் நடைபெறுகின்றன. சிங்கப்பூரிலுள்ள அன்னசித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பழங்கள் மலாயாக் கூட்டரசிலிருந்தே அனுப்பப்படுகின்றன.

சீவப்படும் அன்னசிப் பழத்தின் மேற்றோல்கள் கால்நடைகளுக்கு உணவாகின்றன; மது வடிக்கப் பயன்படுகின்றன; காகிதம் செய்ய உதவுகின்றன.

அன்னசி இலைகளில் உள்ள நார்களைக் கொண்டு, பிலிப்பைன் தீவுகளில் “பைனத்துணி” என்னும் ஒருவகை ஆடையை நெய்கின்றார்கள்.

பூந்தாழை என்பது, இதன் வேறு பெயராகும்.

பயிற்சிகள் :

1. விடை கூறு: 1. அன்னாசியின் தாயகம் எது?
2. அன்னாசி மிகுதியாகப் பயிராகும் இடம் எது?
3. அன்னாசியின் வேறு பெயர் என்ன?
4. பைனாத் துணி எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?
5. அன்னாசிப் பழத் தொழிற்சாலைகள் எங்கெங்கு உள்ளன?

2. நிறைவு செய்: 1. விமானங்கள் தங்கிச் செல்லுமிடம்.........
2. தேனீக்கள் வாழுமிடம்...........
3. சொற்களின் பொருள்களைக் கூறும் நூல்..........
4. மழை அளக்கும் கருவியின் பெயர்.........
5. சிறு பொருள்களைப் பெரிதாக்கிக் காட்டுங் கருவி.........

3. துப்புரவு, மேட்டு நிலம், ஒட்டி, குறுக்கம், அருகு, ஒருமைப்பாடு, மடமை, நூதனம், செங்குத்தாய், நனைந்த—எதிர்ச் சொற்கள் கூறு.

4. மிகுதியாக, அடர்ந்து, மேற்புறம், விளிம்புகளில், பூந்தாழை, வெளிறிய—ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்தெழுது.

# 17. பன்றி

மலாயாக் காடுகளில் பன்றிகள் நிறைய வாழ்கின்றன. அங்குள்ள புலிகள் அவற்றைக் கொன்று தின்னும்.

யானை, காண்டா மிருகம், முள்ளம் பன்றி ஆகியன பன்றியின் இனத்தைச் சேர்ந்தவை, இவை உணவு, நிறம், உருவ அமைப்பு இவற்றால் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.



படம் 30. பன்றியும் அதன் குட்டிகளும்

பன்றி கரிய நிறமுடையது. அதன் தோல் தடித்துப் பருத்திருக்கும். முகம் நீண்டது; வால் குட்டையானது. அதன் உடம்பிற் சில பகுதிகளில் முரட்டு மயிர் உண்டு.

பன்றியின் கண்ணுங் காதுங் கூர்மையானவை. தலையைத் திருப்ப வேண்டுமானால் அது தன் உடலையே திருப்ப வேண்டும்.

ஆண் பன்றிக்கு வாயின் இரு புறங்களிலும் நீண்டு வளைந்த கூரிய கோரைப் பற்கள் உண்டு.

அவற்றைக் கொம்பு என்பர். அவற்ருல் அது தன் எதிரியைக் குத்திக் கிழிக்கும். அது தன் மூக்கினுலும், கொம்புகளினுலும் நிலத்தை ஆழமாகத் தோண்டிக் கிழங்குகளைத் தின்னும்.

பன்றியின் கால்கள் குறுகியவை; பிளவு பட்ட குளம்புகளை உடையவை. குளம்பிற்கு மேல் பின் புறத்தில் ஒரு விரலிருக்கும்.

காட்டுப் பன்றிகள் மிக்க மூர்க்கத் தனமுடையவை. அவை ஒன்று சேர்ந்தே மேயும். அவை இரவில் கூட்டங் கூட்டமாய் ஊருக்கு அருகேயுள்ள காய்கறித் தோட்டங்களுட் புகுந்து அவற்றை அழித்துக் கிழங்குகளையும் வேர்க்கடலைகளையுந் தின்னும். ஆகவே, பயிர் செய்வோர் வேட்டை நாய்களின் உதவியோடு காட்டுப்பன்றிகளை வேட்டையாடிக் கொல்வர்; பொறி வைத்துப் பிடித்துக் கொல்லுவதும் உண்டு.

கிராமப் புறங்களிலுள்ள சீன மக்கள் பன்றிகளை வளர்க்கிருர்கள். இவை, காட்டுப் பன்றிகளைவிட உருவ அமைப்பிலும் குணத்திலும் மாறுபட்டவை. வீட்டில் வளர்க்கப்படும் பன்றி கிழங்கு, வாழைத் தண்டு, கிழங்குத் தழை ஆகிவற்றைத் தின்னுகிறது.

பன்றி ஒரு தடவையில் பல குட்டிகள் போடும். அதனுலேயே "பன்றி குட்டி போடுவது போல" என்னும் பழமொழி வழங்குகிறது.

பன்றி ஓர் அழுக்கான விலங்கு. அது சேற்றில் விழுந்து புரளும்.

சீன மக்களுக்குப் பன்றி இறைச்சி மிக முக்கியமான உணவு. இந்தியரிற் சிலரும் பன்றி இறைச்சியைத் தின்கின்றனர்.

பன்றியின் தடித்த மயிரால் அழுக்குத் துடைக்கும் "பிரஷ்" செய்கிறார்கள். அதன் தோலைக் கொண்டு விலையுயர்ந்த "சேணம்" செய்யலாம். அதன் மலம் பயிர்களுக்கு உரமாகிறது.

பன்றியை வளர்ப்பவர்க்குச் செலவு குறைவு; ஊதியம் மிகுதி. பன்றியின் இன விருத்தி அதனை வளர்ப்பவருக்கு மிகுந்த இலாபத்தைத் தேடிக் கொடுக்கிறது.

"பன்றி பல குட்டி; சிங்கம் ஒரு குட்டி." "பன்றிக்குப் பின் போகிற கன்றும் மலம் தின்னும்." என்பன பன்றியைப் பற்றிய பழமொழிகள்.

### பயிற்சிகள் :

1. விடை கூறு:
   1. மலாயாவில் எந்த மக்கள் பன்றி வளர்க்கின்றனர்?
   2. பன்றி குட்டி போடுவதுபோல—இப் பழமொழி எதனால் தோன்றிற்று?
   3. தோட்டக்காரர்கள் காட்டுப் பன்றிகளை ஏன் வேட்டையாடிக் கொல்கின்றனர்?
   4. பன்றியின் இனத்தைச் சேர்ந்த விலங்குகள் எவை?
   5. வீட்டுப் பன்றி என்னென்ன தின்னும்?
   6. பன்றியின் உபயோகங்கள் யாவை?
2. பொருள் கூறு: கரிய, மூர்க்கம், பொறி, அழுக்கான, இறைச்சி, ஊதியம்.
3. பிரித்தெழுது: மலந்தின்னும், கிராமப்புறம், வாழைத் தண்டு, காட்டுப்பன்றி.

4. பன்றியின் தோல் தடித்துப் பருத்திருக்கும்—பன்றி எனத்தொடங்கி, வாக்கியத்தின் பொருள் கெடாமல் மாற்றி எழுது.
5. ஆண் பன்றிக்கு வாயின் இரு புறங்களிலும் நீண்டு வளைந்த கோரைப் பற்கள் உண்டு—ஆண் பன்றியின் எனத் தொடங்கி வாக்கியத்தை மாற்றி எழுது.
6. காடு, பன்றி, பயிர், பொறி, நாய் என்பன அஃறிணைப் பொருள்கள் ஆகும். இப்பாடத்திலிருந்து பதினைந்து அஃறிணைப் பொருள்களை எடுத்து எழுது.

# 18. மூங்கில்

மூங்கில் இரு வகைப்படும். ஒன்று குழாய் மூங்கில். மற்றொன்று கல் மூங்கில். உட்புறம் சதைப் பற்று நிரம்பி உறுதியாயிருப்பதைக் "கல் மூங்கில்" என்பர். உட்புறம் ஒன்றுமில்லாமல் நீண்ட குழாய் போன்றிருப்பதைக் "குழாய் மூங்கில்" என்பர். நிலத்திணை நூல் வல்லார் மூங்கிலில் நூற்று முப்பத்தாறு வகைகள் உள்ளன என்று கூறுகின்றனர்.

மலாயாவில் வளரும் மூங்கில் உயரிய இனத்தைச் சேர்ந்தது. இது கிராமப் புறங்களிலும், காடுகளிலும் செழித்து வளர்கின்றது. நகர்ப்புறப் பூந்தோட்டங்களில் இதனை அழகுக்காகப் பயிரிடுகின்றார்கள். இள மூங்கிற் செடிகளை வீட்டுத் தோட்டங்களுக்கு வேலியாக அமைத்து ஒரே அளவாகக் கத்தரித்து விடுகின்றார்கள். இது பசுமையும் எழிலும் நிறைந்து சிறு மதிற் சுவர் போலக் காணப்படும்.

மூங்கிற் செடி புல் இனத்தைச் சேர்ந்தது; கரும்பைப் போலக் கணுக்கள் உள்ளது. இதன் இலைகள் மெல்லியவை; நீட்டிய விரல் போன்ற அமைப்புடையவை.



படம் 31. மூங்கில்.

மூங்கில் ஒன்றோடொன்று நெருங்கிப் புதராக ஓர் அடி முதல் அறுபதடிகள் வரை செழித்து வளரும். நூற்றிருபது அடி வரை வளரும் மூங்கில் களும் உண்டு. இவற்றிற் சில செங்குத்தாக வளரும். சில வளைந்து தரையோடு பொருந்தி நீண்டு வளரும்.

மூங்கில்கள் மிகப் பயனுடையவை. கல் மூங்கில் கள் அங்காடி வியாபாரிகள் தங்களின் சுமைகளைத் தோள்களில் தாங்கிச் செல்ல உதவும் காவடிக் கழிகளாக உதவுகின்றன.

குழாய் மூங்கில்களின் மேற்புறம் மழ மழ வென்று இருக்கும். இவற்றின் உட்புறம் குழாயாக இருப்பதால் இவை நீரில் மிதக்கின்றன. எனினும், இவை உறுதி வாய்ந்தவை.

குழாய் மூங்கில்கள் கூடாரங்களுக்கு ஏற்ற தூண்களாகின்றன. பழங்குடி மக்களிற் சிலர் இவற்றை ஒன்றேடொன்று சேர்த்துக் கட்டு மரம் அமைத்து ஆற்றைக் கடக்க உபயோகிக்கின்றனர்; காட்டு மரங்களில் ஏற ஏணி செய்து பயன்படுத்துகின்றனர்.



படம் 32. மூங்கிற் பொருள்கள்.

மூங்கிற் குழாய்கள் அரிசிப் பிட்டு வேக வைக்க உதவுகின்றன; பழங்குடி மக்கள் மூங்கிற் குழாயினுள் மெல்லிய நாரை வைத்து, மற்றொரு மூங்கிலாற் பல முறை தேய்த்து நெருப்பு உண்டாக்குகின்றனர். அவர்கள் மூங்கிற் குழாய்களை மரத்தில் தட்டி ஒரு வகை இசை எழுப்பி நடனமாடுவர்.

மூங்கிலின் உட்புறச் சதைப் பகுதி உயர்ந்த வகைக் காகிதம் செய்ய உதவுகின்றது. மூங்கில் இலைகள் ஆடு மாடுகளுக்கு உணவாகும். மூங்கில் குருத்துக்களை யானைகள் விரும்பித் தின்னும்.

மூங்கிற் குருத்துக்களை மலாய்க்காரர்களும், சீனரும் உணவாகக் கொள்கின்றனர். தவிட்டு நிற முடைய மூங்கில் விதையை "மூங்கில் அரிசி" என்பர். இது அரிசியை விட ஒன்றரைப் பங்கு சத்துள்ளது; ஊன் சத்து மிகுந்தது. இதனை ஏழை மக்கள் உண வாகக் கொள்கின்றனர்.

மலாயாவிலுள்ள சீனர்களும், மலாய்க்காரர் களும் மூங்கில்களைக் கொண்டு கூடை, பெட்டி, கட்டில், மேசை, நாற்காலி, மறைப்புத் தட்டி, பாய், தூரிகை, துடைப்பம், ஊதுகுழல், புல்லாங்குழல், தூண்டில்கள், சீனர்கள் உணவு உண்ண உதவும் கோல்கள், விளை யாட்டுச் சாமான்கள் முதலியன செய்கிறார்கள்.

### பயிற்சிகள் :

1. விடையளி:

1. மூங்கிலைக் குறிக்கும் வேறு இரு பெயர்கள் யாவை?
2. வேய்ங்குழல் என்பது என்ன? அதனைப் பார்த்திருக்கிறாயா? அது எதனாற் செய்யப்படுகிறது?
3. வேய்—இச்சொல் குறிக்கும் பொருள் யாது?
4. மூங்கிலாற் செய்யப்படும் பத்துப் பொருட்களை எழுது.
5. கல் மூங்கில் என்பது யாது?
6. யானை எதனை விரும்பித் தின்னும்?
7. மூங்கிலிற் காகிதம் செய்ய உதவு வது எது?

8. பழங்குடி மக்கள் எவ்வாறு நெருப்பு உண்டாக்குகின்றனர் ?

9. " மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீர் " என்பது பழமொழி. மூங்கிலைக் குறிக்கும் வேறு ஒரு மொழியை எழுது.

2. சதைப்பற்று, நிலத்திணை, அளவாக, கணுக்கள், ஒன்றேடொன்று, அங்காடி, மெல்லிய—ஒவ்வொன்றை யும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்தெழுது.

3. உட்புறம், முப்பத்தாறு, அளவாக, மற்ருெரு, உணவா கும், சத்துள்ளது—பிரித்தெழுது.

4. மூங்கிற் குருத்துக்களை மலாய்க்காரர்களும் சீனர் களும், உணவாகக் கொள்கின்றனர்—மூங்கிற் குருத் துக்கள் என்று தொடங்கி, வாக்கியத்தின் கருத்துக் கெடாமல் மாற்று.

5. மூங்கிலின் உட்புறச் சதைப் பகுதி காகிதம் செய்ய உதவுகின்றது—வாக்கியத்தினிடையே, சதைப் பகுதி யால் என வருமாறு வாக்கியத்தை மாற்று.

# 19. பாஞ்சாலி சபதம்

இராமாயணமும் பாரதமும் இந்திய மொழிகள் அனைத்திலுமுள்ளன. தமிழிற் கம்பர் இயற்றியுள்ள இராம காதையும், வில்லிபுத்தூரார், நல்லாப் பிள்ளை ஆகியோர் இயற்றியுள்ள பாரதங்களும் இலக்கிய நயம் நிறைந்தவை. இவை தமிழிலக்கிய ஆர்வமுள்ள வர்களால் விரும்பிக் கற்கப்படுகின்றன.

பாரதக் கதையில் சூது போர்ச் சருக்கம் என்பது ஒரு பகுதி. இதனையே பாரதியார் " பாஞ்

சாலி சபதம்" என்னும் பெயரால் ஒரு சிறு காவிய மாக ஆக்கித் தந்துள்ளார்.

தமிழ் நாட்டில் எழுந்த மணிமேகலை, முதலிய காப்பியங்கள் மகளிர் பெயரால் அமைந்து, பெண்ணினத்துக்குப் பெருமையளிக்கின்றன. பாரதியார் பெண்ணுக்கு உயர் வளிப்பவர். ஆகவே, அவர் தாம் இயற்றிய காவியத்துக்குப் "பாஞ்சாலி சபதம்" எனப் பெயரிட்டார்.



படம் 33. பாஞ்சாலி துச்சாதனனல் துகில் உரியப் படுதல்.

கம்பர் தாம் இயற்றிய இராம காதையில், வால்மீகி இராமாயணத்திற் காணப்படாத கருத்துக்கள் பலவற்றைத் தமிழ்ப் பண்பாட்டிற்குப் பொருந்துமாறு புகுத்தியுள்ளார். இவ்வாறே, பாரதியாரும் பாரதக் கதையில் காணப்படும் கதைப் போக்குக்கு



படம் 34. பாரதியார்.

மாறாகத் தாம் வாழ்ந்த கால, அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்பச் சில மாறுதல்களைச் செய்திருக்கிறார்.

பாஞ்சாலி சபதத்தில் துரியோதனனின் தந்தையான திருதராட்டிரன், தன் தம்பியின் மைந்தர்களான பாண்டவர்களை அஸ்தினாபுரிக்கு வரவழைத்தல்; தருமன் துரியோதனன் தாய் மாமனான சகுனியோடு சூதாடித் தன் நாடு நகர்களை இழத்தல்; தருமன் மீண்டும் தன் தம்பியரையும், மனைவி பாஞ்சாலியையும், தன்னையும் பந்தயப் பொருள்களாக வைத்துத் தோற்றல்; துரியோதனன் ஏவலால் அவன் தம்பி துச்சாதனன் பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றி அரசவைக்கு இழுத்து வருதல்; துச்சாதனன் பாஞ்சாலியின் துகிலைக் களைதல்; கண்ணன் அருளால் ஆடை வளர்ந்து கொண்டே போதல்; துச்சாதனன் களைத்து வீழ்தல்; துரியோத

னன் தன் எண்ணம் ஈடேருததால் நாணித் தலை குனிதல்; அர்ச்சுனன் கர்ணனைக் கொல்வதாக ஆணையிடுதல்; வீமன் துரியோதனனைத் தொடையில் அடித்துக் கொல்வதாகவும், துச்சாதனன் தோள் களைப் பிய்த்தெறிந்து இரத்தங் குடிப்பதாகவும் சூளுரைத்தல்; பாஞ்சாலி, துரியோதனன், துச்சாத னன் ஆகிய இருவரின் இரத்தத்தைத் தன் கூந்தலில் பூசி, அத்துடன் நறுநெய் தேய்த்து நீராடியபின், துச்சாதனனுல் அவிழ்க்கப்பட்ட தன் கூந்தலை அள்ளி முடிப்பதாகச் சபதம் கூறுதல் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

பாஞ்சாலி சபதத்திற் பாரதியார் புகுத்தியுள்ள சில மாறுதல்களைக் கவனிப்போம். "அரசன் நாட்டைக் காக்கும் பொறுப்பை மட்டும் தனக்குரிய தென்று எண்ண வேண்டும்; காவலன் என்னும் சொல் இதனையே குறிக்கிறது; எந்த அரசனும் தன் ஆட்சிப் பொறுப்பிலுள்ள நாட்டைத் தன்னுடைய தாகக் கருதலாகாது" என்பது பாரதியார் கருத்து. "தருமன் நாட்டு மக்களைத் தன்னைப் போல் மனித ரென்று கருதவில்லை; மக்களை ஆட்டு மந்தையாகக் கருதி விட்டான்; செங்கோல் முறை தவறினன். கோவிலிற் பூசை செய்பவர் அங்கிருக்கும் விக்கிரகங் களை எடுத்து விற்பது போலவும், வீட்டின் காவலாளி தன் கடமையை மறந்து தன் பொறுப்பிலுள்ள வீட்டைப் பந்தயப் பொருளாக வைத்து இழப்பது போலவும் தருமன் நாட்டைச் சூதில் தோற்று விட்டான்" என்கிருர் பாரதியார்.

"மன்னன் ஆளும் நெறி தவறிக் குடிகளை வருத் தினல் அமைச்சர் முதலானேர் அவனைத் தடுத்து நல்வழிப் படுத்த வேண்டும். அமைச்சர் முதலா

ஞேரின் அறிவுரையை அரசன் கேளாவிடில் நாட்டு மக்கள் திரண்டெழுந்து, அரசன் போக்கைத் தடுத்து நிறுத்தி, நீதி நிலைக்கப் பாடுபட வேண்டும்" என்பது பாரதியாரின் கொள்கை.

துரியோதனன் அவையில் துச்சாதனன் பாஞ்சாலியின் ஆடையைக் களைந்து அவமானப்படுத்த முயன்றபோது, அவையிலிருந்தவர்கள் அவனைத் தடுத்திருக்க வேண்டும்; அவன் அவையினரை மதியா விட்டால் அவனைக் கொன்று திரௌபதியைக் காத்திருக்க வேண்டும். அவையிலிருந்தவர்கள் துரியோதனனுக்கு அஞ்சி எதனையும் செய்யவில்லை. ஆகவே, அவர்களை, "நெட்டைமரங்களைப் போலச் செயலற்று நின்று புலம்பிய கோழைகள்" என்கிறார் பாரதி. இனி மன்னனுடைய இழி செயலைத் தடுத்து நிறுத்தாத அஸ்தினபுரமக்களை, "வீரமிலா நாய்கள்; கீழ்மைக் குணமுடையவர்கள்" எனப் பழிக்கிறார்; பாஞ்சாலிக்கு கேடு சூழ்ந்த துரியோதனனையும், அவன் தம்பியையும் நாய்கள் என இழித்துரைக்கிறார்.

பாஞ்சாலி சபதத்தில் சூதாட்டத்தின் தீமை, செங்கோல் ஆட்சியின் சிறப்பு, கயவர்களால் நல்ல ஆட்சிக்கு நேரும் தீங்குகள், நல்ல ஆட்சியின்மையால் உண்டாகும் கேடுகள், பெண்மையின் உயர்வு, மக்களின் கடமை முதலியன விரிவாகக் கூறப்படுகின்றன.

பாஞ்சாலி சபதம் சிந்து நடையில், சிறு சிறு சொற்றொடர்களால் அமைந்தது. எளிமையும் தெளிவும் நிரம்பியது.

### பயிற்சிகள் :

1. விடை தருக : 1. தருமன் சூதாட்டத்தில் நாடிழந்தது குறித்துப் பாரதியார் கூறுவ தென்ன ?
   2. பாரதியார் வீரமிலா நாய்கள் என யாரைக் கூறுகிறார் ?
   3. அமைச்சர்களின் கடமை யாது ?
   4. பாஞ்சாலி செய்த சபதம் யாது ?
   5. வீமன் செய்த சூளுரை என்ன ?

2. சருக்கம், காப்பியங்கள், ஆர்வமுள்ளவர், இராமகாதை, பந்தயப்பொருளாக, நறுநெய்—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

3. கூந்தல்—இச் சொல்லைக் குறிக்கும் வேறு நான்கு பெயர்ச் சொற்களை எழுது.

4. துச்சாதனன் பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றி இழுத்தான்—துச்சாதனனால் என்று தொடங்கி வாக்கியத்தின் பொருள் கெடாமல் மாற்றி எழுது.

5. வேண்டும், களைந்து, தடுத்து, நிறுத்தி, கீழ்மை, ஆக்கி, வாருக, தோற்றல், அவிழ்த்த, நினைக்க—எதிர்ச் சொற்கள் எழுது.

6. வீழ்தல், ஆளுதல் என்பன தொழில்களைக் குறிக்கும் பெயர்களாகும். ஆகவே, இவற்றைத் தொழிற்பெயர் என்பர். இப்பாடத்தில் இருந்து வேறு ஐந்து தொழிற் பெயர்களை எடுத்து எழுது.

# 20. குருடர்கள் பலவிதம்



## காட்சி—1

இடம்: அக்பர் அவை.

பாத்திரங்கள்: அக்பர், விகடகவி பீர்பால்.

அக்பர்: பீர்பால், மூடர்களுடன் பழக நேர்ந்தால் என்ன செய்யவேண்டும்?

பீர்பால்: (மௌனமாய் நிற்றல்)..........................

அக்பர்: நான் கேட்பது உன் காதுகளிற் விழவில்லையா? மூடர்களுடன் பழக நேர்ந்தால் என்ன செய்யவேண்டும்?

பீர்பால்: (மீண்டும் மௌனம்)..........................

அக்பர் : நீ என்ன குருடனு? இஃது அரச சபை என் பதை மறந்து விட்டாயா?

பீர்பால் : அரசே, கோபம் கொள்ளாதீர்கள். தங்கள் கேள்விக்கு நான் அப்போதே பதில் அளித்து விட்டேனே!

அக்பர் : நீ, எங்கே பதில் அளித்தாய்? மௌனமாக அல்லவா நிற்கிருய்?

பீர்பால் : ஆம் அரசே, அதுதான் தங்களின் கேள் விக்குப் பதிலாகும்! மூடர்களுடன் பழக நேர்ந் தால் மௌனம் சாதிக்க வேண்டும்!

அக்பர் : நன்று! நன்று!

பீர்பால் : அரசே, மன்னிக்க வேண்டும். தாங்கள் என்னைக் குருடன் என்றீர்கள். குருடர்களில் பல வகையினர் இருக்கின்றனர்! அதில் நான் எந்த வகையைச் சேர்ந்தவன்?

அக்பர் : குருடர்களிற் பல விதமா? நீ சொல்வது புதுமையா யிருக்கிறதே?

பீர்பால் : அதில் புதுமை ஒன்றும் இல்லை அரசே. நான் சொல்வது உண்மைதான்.

அக்பர் : குருடர்கள் பலவிதம் என்கிருயே, அவர்கள் யாவர்? சற்று விவரமாகச் சொல்.

பீர்பால் : அரசே, இயற்கையாகவே கண் பார்வை யற்றவர்கள் பிறவிக் குருடர்கள். இவர்களைத் தவிர வேறு மூன்று வகைக் குருடர்கள் உளர். ஒரு சாரார் கண்களிருந்தும் அவற்றைப் பயன்படுத்தாதவர்கள்! இன்னெரு சாரார் பணச் செருக்கால் குருடராகின்றனர்! மற்ருெரு சாரார் கால்களாற் குருடராகின்றனர்!

அக்பர் : அப்படியா. நீ சொல்வதை எமக்கு மெய்ப் பிக்கவேண்டும் ?

பீர்பால் : உத்தரவு அரசே !

## காட்சி—2

இடம் : கடைத் தெரு.

பாத்திரங்கள் : பீர்பால், சேவகர்கள், உத்தியோ கஸ்தர்.

(பீர்பால் தோளில் உள்ள துணியைத் தரை யில் விரித்து அமர்ந்து, ஒரு தாளில் எதையோ எழுதிக் கொண்டிருக்கிறார்.)

சேவகர்கள் : ஐயா, தாங்கள் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் ?

பீர்பால் : அரண்மனைச் சேவகர்களே, சற்றுப் பொறுங்கள் ! உங்கள் பெயர்களைக் குறித்துக் கொள்கின்றேன் !

சேவகர்கள் : எதற்காக எங்கள் பெயர்களைக் குறித் துக் கொள்ளுகின்றீர்கள் ?

பீர்பால் : பயப்பட வேண்டாம். விரைவில் இதன் காரணத்தைத் தெரிந்து கொள்வீர்கள் !

(சேவகர்கள் போதல்.)

## காட்சி—3

இடம் : அரண்மனை அதிகாரிகளின் இல்லங்கள்.

பாத்திரங்கள் : பீர்பால், அதிகாரிகள்.

ஓர் அதிகாரி : இதென்ன ? பீர்பால்போல் தெரி கிறதே ?

**மற்ருேர் அதிகாரி:** ஆமாம். பீர்பாலேதான்! அக்பர் விரட்டி விட்டார் போலிருக்கிறது!

**இன்னேர் அதிகாரி:** சரிதான். பீர்பால் பிச்சை எடுக்கப் புறப்பட்டு விட்டான்.

**வேருேர் அதிகாரி:** (பீர்பாலைப் பார்த்து) நீ யாரப்பா? உனக்கு என்ன வேண்டும்?

**பீர்பால்:** ஐயா, என்னைத் தங்களுக்குத் தெரியவில்லையா? நான்தான் பீர்பால்! சக்கரவர்த்தி அவர்கள் என்னை விரட்டியடித்து விட்டார்கள்! இந்த ஏழைக்கு உதவுங்கள் ஐயா!

**அதிகாரிகள் எல்லோரும்:** சீச்சீ! நீ யாரென்பதே எங்களுக்குத் தெரியாது! போடா, போ!

(பீர்பால் அந்த அதிகாரிகளின் பெயர்களைக் குறித்துக் கொள்ளல்.)

## காட்சி—4

**இடம்:** அரச அவை.

**பாத்திரங்கள்:** பீர்பால், அக்பர்.

**பீர்பால்:** அரசர் பெருமானே, வணக்கம். தயவு செய்து இந்தச்சீட்டில் நான் குறித்துள்ளவர்களை இங்கே வரவழைக்குமாறு வேண்டுகின்றேன்.

**அக்பர்:** யாரங்கே. இந்தப் பட்டியலில் கண்டுள்ளவர்களை இங்கே அழைத்துவா.

(சேவகன் சென்று அழைத்து வருகிருன்.)

**பீர்பால்:** பிரபு, இந்தச் சேவகர்கள் கண்ணிருந்தும் அதைப் பயன்படுத்தாத குருடர்களாவர்!

**அக்பர்:** அதெப்படி?

பீர்பால்: அரசே, நான் ஓரிடத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தேன். இவர்கள் என்னிடம் வந்து "என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டார்கள். நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்பதை இவர்கள் பார்த்துக் கொண்டே என்னை இவ்வாறு கேட்டதால் இவர்கள் கண்களை உபயோகிக்காத குருடர்களாவர்!

அக்பர்: (சிரித்துக் கொண்டே) அவர்கள்?

பீர்பால்: அவர்களா? அவர்கள் செல்வத்தாற் குருடானவர்கள்!

அக்பர்: எப்படி?

பீர்பால்: அரசே, நான் பிச்சைக்காரனைப்போல உடையணிந்து கொண்டு இந்த அதிகாரிகள் வீட்டுக்குச் சென்றேன். இவர்கள் என்னைத் தெரிந்திருந்தும், அறவே தெரியாது என்று சொல்லி விட்டார்கள்!

அக்பர்: (சிரித்துக் கொண்டே) சரி, சரி, கால்களால் குருடர்களாகின்றவர்கள் இருப்பதாகச் சொன்னாயே? அதைக் காட்டுவாயா?

பீர்பால்: அரசே, அதற்குச் சற்று அவகாசம் அளிக்கவேண்டும்.

## காட்சி—5

இடம்: அரண்மனை (விருந்து மண்டபம்.)

பாத்திரங்கள்: விருந்தினர்கள், பீர்பால், வேலையாட்கள்.

(அரண்மனையில் விருந்தினர்கள் அமர்ந்து உணவு உண்கின்றனர். பீர்பால் சிலருடன் ஓடி வருதல்.)

பீர்பால்: ஓடுங்கள்! ஓடுங்கள்! அரண்மனையில் தீப் பற்றிக் கொண்டது! (விருந்தினர்கள் அனைவரும் அலறியடித்துக் கொண்டு ஓடுகிறார்கள். ஓடும் பொழுது தங்களுடைய மிதியடிகளை விடுத்துப் பிறருடைய மிதியடிகளை மாட்டிக்கொண்டு ஓடுகின்றார்கள்! வெளியில் தீ இல்லை.)

விருந்தினர்: பீர்பால் எங்களை ஏமாற்றி விட்டார்! பீர்பால் எங்களை அவமதித்து விட்டார்! (விருந்தினர்கள் அக்பரிடம் வருதல்.)

## காட்சி—6

இடம்: அரச சபை.

பாத்திரங்கள்: அக்பர், விருந்தினர்கள், பீர்பால்.

விருந்தினர்கள்: அரசே, நாங்கள் விருந்துண்ணும் சமயம் அரண்மனை தீப்பற்றிக் கொண்டது எனப் பொய் சொல்லிப் பீர்பால் எங்களை ஏமாற்றியதோடு அவமதிப்பும் செய்து விட்டார். அதற்கேற்ற தண்டனையை அவருக்கு அளிக்க வேண்டும்.

பீர்பால்: பிரபு, கால்களினால் குருடர்களாக இருப்பவர்களைப் பார்க்க வேண்டும் என்றீர்களே. அதற்கு இப்பொழுது வாய்ப்புக் கிடைத்து விட்டது! அதற்காகத்தான் இப்படி ஒரு பொய்யைச் சொன்னேன்! இப்பொழுது இவர்களில் யாராவது தங்களுடைய சொந்த மிதியடிகளை மாட்டியிருக்கின்றனரா என்று கேளுங்கள். இவர்களே, கால்களால் குருடர்கள்!

அக்பர் : பலே! பலே! பீர்பால் உன் திறமையே திறமை! இங்கே வா, இந்த விலை உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்.

பீர்பால் : அரசே நன்றி. (அரசரை வணங்கிப் பரிசுகளைப் பெறுதல்.)

### பயிற்சிகள் :

1. விடை தருக :
   1. பீர்பால் என்பவர் யார்?
   2. மூடர்களுடன் பழக நேர்ந்தால் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? ஏன்?
   3. பிறவிக் குருடர் எனப்படுவோர் யாவர்?
   4. பீர்பால் குறிப்பிட்ட பிற குருடர்கள் யாவர்?
   5. கால்களாற் குருடராகின்றவர்கள் யாவர்?

2. கண்களிருந்தும் பயன்படுத்தாத குருடர்கள் எனப் பீர்பாலால் நிரூபிக்கப்பட்டவர்கள் தாங்களாகவே அவ்வாறு நேருதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சியை விவரிப்பதாகக் கூறு.

3. அக்பரைக் குறிக்கப் பீர்பால் கையாண்டுள்ள சொற்களை எடுத்து எழுது.

# செய்யுட் பகுதி

---

## அறநெறிச் சாரம்

### கல்வியின் அவசியம்

எப்பிறப்பு ஆயினும் ஏமாப்பு ஒருவற்கு
மக்கள் பிறப்பின் பிறிதுஇல்லை ;—அப் பிறப்பில்
கற்றலும், கற்றவை கேட்டலும், கேட்டு அதன்கண்
நிற்றலும் கூடப் பெறின். 1

### தன் உயர்வு தாழ்வுகளுக்குத் தானே காரணம்

தன்னின் பிறிது இல்லை தெய்வம் ; நெறி நிற்பில்
ஒன்றானும் தான்நெறி நில்லானேல்,—தன்னை
இறைவனைச் செய்வானும் தானேதான் ; தன்னைச்
சிறுவனைச் செய்வானும் தான். 2

### தற்புகழ்ச்சி கூடாது

பல கற்றேம் யாம் என்று தற்புகழ வேண்டா ;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக் குடையும் காக்கும் ;
சில கற்றார் கண்ணும் உளவாம், பல கற்றார்க்கு
அச்சாணி அன்னதோர் சொல். 3

### புறங்கூறுதல் ஆகாது

முன் நின்று ஒருவன் முகத்தினும் வாயினும்
கல் நின்று உருகக் கலந்து உரைத்துப்—பின் நின்று
இழித்து உரைக்கும் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்து இமையார் நின்ற நிலை. 4

### மூன்று சிறந்த குணங்கள்

தூயவாய்ச் சொல்லாடல் வன்மையும், துன்பங்கள்
ஆயபொழுது ஆற்றும் ஆற்றலும்,—காய்வு இடத்தும்

வேற்றுமை கொண்டாடா மெய்ம்மையும், இம் மூன்றும்
சாற்றுங்கால் சாலத் தலை. 5

—முனைப்பாடியார்

அருஞ்சொல் விளக்கம் :

1. ஏமாப்பு - இன்பஞ்செய்வது ; பிறிது - வேறு ஒன்று ; அதன்கண் - அந்நெறியில்.
2. நெறி - நல்லொழுக்கம் ; இறைவனாக - தலைவனாக ; சிறுவனாக - தாழ்ந்தோனாக.
3. அலர் - பரந்த ; தற்புகழ - தன்னைத்தானே புகழ்ந்து கொள்ள ; கண்ணும் - இடத்திலும் ; அச்சாணி அன்னதோர் சொல் - (அச்சாணியைப் போன்ற) இன்றியமையாத உறுதிச் சொல்.
4. கல் நின்று உருக - கல்லும் உருகுமாறு ; கலந்து - புகழ்ந்து ; சான்றோர் - கயவர் என்பது குறிப்பு ; இமையார் - தேவர்கள்.
5. சொல்லாடல் - உரையாடல் ; வன்மை - திறன் ; ஆற்றும் - பொறுத்துக் கொள்ளும் ; காய்வு - வெறுப்பு ; சால - மிக.

## நாலடியார்

### கல்வி அழகே அழகு

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டு அழகும்
மஞ்சள் அழகும் அழகு அல்ல—நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு. 1

### கல்விக்குக் கரை இல்லை

கல்வி கரை இல ; கற்பவர் நாள் சில ;
மெல்ல நினைக்கின் பிணிபல ;—தெள்ளிதின்

ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீர்ஒழியப்
பால் உண் குருகின் தெரிந்து. 2

### நட்பின் இயல்பு

கனைகடல் தண்சேர்ப்ப! கற்று அறிந்தார் கேண்மை
நுனியில் கரும்பு தின்று அற்றே—நுனி நீக்கித்
தூரில் தின்று அன்ன தகைத்தரோ பண்புஇலா
ஈரம் இலாளர் தொடர்பு. 3

### பிழை பொறுத்தல்

நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக்கொளல் வேண்டும்;
நெல்லுக்கு உமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு;
புல் இதழ் பூவிற்கும் உண்டு. 4

### மூடர் இயல்பு

கற்று அறிந்த நாவினர் சொல்லார் தம்சோர்வு அஞ்சி
மற்றையர் ஆவார் பகர்வர்; பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும்; எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை ஒலி. 5

—சமண முனிவர்கள்

### அருஞ்சொல் விளக்கம்:

1. குஞ்சி - ஆடவர் மயிர்முடி; கொடும் - வளைவான.
2. கரை - எல்லை; மெல்ல - பொறுமையோடு; பிணி - நோய்; தெள்ளிதின் - தெளிவாக; அமைவுடைய - பொறுத்தமானவற்றை; பால் உண்குருகு - பால் உண்ணுகின்ற அன்னப் பறவை.
3. கனை - ஒலிக்க; சேர்ப்ப - பாண்டியனே! கேண்மை - நட்பு; தின்று அற்றே - தின்பது போலாம்; தூரில் - அடியிலிருந்து; தின்று அன்ன - தின்பதைப் போன்ற;

தகைத்து - தன்மையுடையது ; அரோ - அசைநிலை ; பண்பு - குணம் ; ஈரம் - அன்பு.

4. நனி - மிக ; அல்லார் - நற்குணமில்லாதவர் ; அடக்கி - தூற்றுமல் ; புல்இதழ் - புறவிதழ்.

5. சோர்வு - சொற்குற்றம் ; மற்றையர் - மூடர் ; வற்றிய - காய்ந்த ; பச்சோலை - பசுமையான ஓலை.

## நன்னெறி

### பிரிந்து கூடுதல்

நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர் பெருமை நொய்து ஆகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 1

### கோபத்தை அடக்குதல்

உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடம் கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. 2

### அன்புடைமை

இல்லானுக்கு அன்பு இங்கு இடம் பொருள் ஏவல் மற்று
எல்லாம் இருந்தும் அவற்கு என்செய்யும்—நல்லாய்
மொழி இலார்க்கு ஏது முதுநூல், தெரியும்
விழி இலார்க்கு ஏது விளக்கு. 3

### இன்சொல்

இன்சொலால் அன்றி இருநீர் வியன் உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்காது அழற்கதிரால் தண் என்
கதிர் வரவால் பொங்கும் கடல். 4

TB
031(6)
N62

## கூடா நட்பு

கல்லா அறிவுஇல் கயவர்பால் கற்று உணர்ந்த
நல்லார் தமது கனம் நண்ணரே—வில்ஆர்
கணையில் பொலியும் கருங்கண்ணய்! நொய்துஆம்
புணையில் புகும் ஒண்பொருள். 5

—சிவப்பிரகாச அடிகள்

## அருஞ்சொல் விளக்கம்

1. நீக்கம் - நீங்குதல்; புணர்ந்தாலும் - ஒன்று சேர்ந்தாலும்; குழலாய் - கூந்தலையுடைய பெண்ணே; புல்லினும் - ஒட்டிக்கொண்டாலும்; திண்மை - உறுதி.
2. கவர்ந்து - தன்வசமாக்கி; வெள்ளம் - நீர்ப்பெருக்கு; தடம் - அகன்ற, பேர்த்து - உடைத்து; விளம்பு - சொல்.
3. மொழிஇலார் - ஊமையர்; விழிஇலார் - குருடர்; இடம் - வீடு முதலியன; ஏவல் - பணியாட்கள்; ஏது - என்ன பயன்.
4. அதிர் - ஒலிக்கின்ற; வியன் - அகன்ற; உலகம் - உலக மக்கள்; அழற்கதிர் - கதிரவன்; தண் என் கதிர் - திங்கள்; மகிழாது - மகிழமாட்டார்கள்.
5. கயவர் - இழிந்தவர்; அறிவுஇல் - அறிவில்லாத; கனம் - பெருமை; நண்ணர் - அடையார்; வில்ஆர் - வில்லில் பொருந்திய; கணை - அம்பு; நொய்து - அற்பம்; புணை - தெப்பம்; ஒண் - கனம்.

135742

17-9-65



# MALAYA THESIA VACHAKAM

DISTRIBUTORS:
KRISHNA BOOK DEPOT,
25, BATU ROAD, KUALALUMPUR.

COPY RIGHT:
ASHOK & COMPANY, KUALALUMPUR.